## கட்டாய கவனத்திற்கு

இந்த புள்ளியிடும் திட்டத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விடைகள் பரீட்சகர்களுக்கு வழிகாட்டுவதற்காக மட்டுமே ஆகும். பரீட்சார்த்திகள் மாதிரி விடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் தமது விடைகளில் உள்ளடக்காமல் இருக்கலாம். எனினும் எழுதப்பட்டுள்ள விடைகளை மதிப்பீடு செய்யும் போது மாதிரி விடைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இசைவானவை எனத் தென்படுமாயின் பொருத்தமான புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கல்வி பொது தராதர பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2019
## 23 - அரசியல் விஞ்ஞானம் (பழைய பாடத்திட்டம்)
## புள்ளி வழங்கல் திட்டம்

பகுதி I

நேரம் : 02 மணித்தியாலங்கள்
தெரிவுகள் 5 இனைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 50 ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் ஆகும்.

பகுதி II

நேரம் : 03 மணித்தியாலயங்கள்
இவ்வினாப்பத்திரம் 03 பகுதிகளைக் கொண்டது.

A – பகுதி – குறுகிய விடைகளை வழங்கும் 20 வினாக்களை உள்ளடக்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் 20 புள்ளிகள் ஆகும்.

B – பகுதி – அரை கட்டமைப்பு மற்றும் கட்டுரை வகை வினாக்கள் 04 இனைக் கொண்டது. இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் ஆகும்.

C – பகுதி – அரை கட்டமைப்பு மற்றும் கட்டுரை வகை வினாக்கள் 04 இனைக் கொண்டது. இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் 40 புள்ளிகள் ஆகும்.

**இறுதி புள்ளிகளைக் கணித்தல்**

வினாப்பத்திரம் I = 100

வினாப்பத்திரம் II = 100

இறுதிப் புள்ளி = 200/2 = 100

**பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்கள் :**

இக்கட்டுரையினுள் கல்வி பொதுத் தராதர (உ.தர) 2019 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சைக்கான இல 23 அரசியல் விஞ்ஞானம் பாடத்திட்டத்திற்கு அமைவாக முதலாம் மற்றும் இரண்டாம் வினாத்தாள்களில் அடங்கும் வினாக்களுக்கான கட்டுப்பாட்டு பரிசோதனை சபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத் தொகுதிகளே உள்ளடங்கியுள்ளது. இவ்விடைகள் உதவி பரிசோதகர்களுக்கும் விடைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. விடைகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான அடிப்படை விடயங்கள் மாத்திரமே உள்ளடங்கியுள்ளது. இவ்விடயங்களுக்கு மேலதிகமாக பரிட்சார்த்திகள் மேலதிக விடயங்களை முன்வைத்திருப்பின் அதன் பொருத்தப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதற்கான புள்ளிகளை வழங்க பரிசோதகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பரிசோதகர் விசேட அவதானத்தினைச் செலுத்த வேண்டும்.

(அ) வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதா? அறிமுகம் மற்றும் ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.

(ஆ) வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாகத் தெரிவு செய்துள்ளனரா? மற்றும் அவ்விடயங்களை சரியாக முறையில் ஒழுங்கமைத்து முன்வைத்துள்ளனரா? என்பது தொடர்பாகவும்

(இ விடயங்களை போதுமானளவு பகுப்பாய்வு செய்துள்ளனரா என்பது பற்றியும்

(ஈ) இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா? மற்றும் இந்த இறுதி முடிவின் தர்க்க முறை மற்றும் பொருத்தமுடையதா என்பது பற்றியும் பரீட்சார்த்திகள் விடையினுள் முன்வைக்கின்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை ஒன்று காணப்படுமாயின் அது தொடர்பில் பிரதான பரீட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

**வினாப்பத்திரங்களின் நோக்கங்கள்**

**வினாப்பத்திரம் I**

ஒட்டுமொத்த பாடத்திட்டமும் வினாத்தாளில் உள்ளடங்கும் வகையில் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.

**வினாப்பத்திரம் II**

A, B மற்றும் C எனும் மூன்று பகுதிகளைக் கொண்டது.

**வினாப்பத்திரம் II இன் – A பகுதி**

ஒட்டுமொத்த பாடத்திட்டத்தையும் உள்ளடக்கும் வகையிலான 20 குறு வினாக்களைக் கொண்டது.

**வினாப்பத்திரம் II இன் – B பகுதி**

அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு, தெளிவினை பரிசோதிப்பதே வினாப்பத்திரத்தின் இப்பகுதியின் நோக்கமாகும். இதன்படி சில வினாக்களின் மூலம் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பாக நேரடியாக பரீட்சார்த்தியின் அறிவினை பரிசோதிப்பதோடு மேலும் சில வினாக்கள் மூலம்

தெரிவு செய்யப்பட்ட நாடுகள் சிலவற்றின் ஊடாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய பரீட்சாத்தியின் அறிவு மற்றும் தெளிவு என்பன பரிசோதிக்கப்படும்.

**வினாப்பத்திரம் II இன் – C பகுதி**


இவ்வினாப்பத்திரத்தின் C பகுதியின் நோக்கம் யாதெனில் இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்புகளின் தாக்கங்கள் மற்றும் அதன் பெறுபேறுகள் தொடர்பாகவும், சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வளர்ச்சிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும். இதற்கும்மேலாக இலங்கை மற்றும் சர்வதேச சமூகத்திற்கிடையில் காணப்படும் தொடர்புகளின் இயல்புகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினை பரிசோதிப்பதும் மற்றுமொரு நோக்கமாகும்.

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

16.08.2019 / 1400 – 1600

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.
* ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

● **1** தொடக்கம் **15** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் மாத்திரமே சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் கற்கை மாணவர்களை
A - சமூகத்தின் அதிகாரம் மற்றும் அதிகாரத்துவத்தை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது.
B - நல்ல மற்றும் தீய ஆட்சியை வேறுபடுத்தி இனங்காண உதவுகின்றது.
C - பொறுப்புள்ள பிரஜைகளாகுவதற்கு உதவுகின்றது.
D - அவர்கள் மத்தியில் ஆன்மீகத்தை வளர்ப்பதற்கு உதவுகின்றது.
E - அதிகாரப் போராட்டத்தின் உள்ளடக்கத்தினை பகுப்பாய்வு செய்ய உதவுகின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**2.** அரசியல்
A - பொது விவகாரங்களுடன் தொடர்புடையது
B - முரண்பாடுகளை சமாதானமாக தீர்த்தலுடன் தொடர்புடையது.
C - அரசு மற்றும் அதன் நிறுவனங்களுடன் தொடர்புடையது.
D - பொதுக் கொள்கை செயன்முறையுடன் தொடர்புடையது.
E - மனித வாழ்க்கையில் மதத்தின் வகிபங்குடன் தொடர்புடையது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**3.** நவீன சமூகங்களில் அரசானது
A - உள்வாரி மற்றும் வெளிவாரி இறைமையினைக் கொண்டுள்ளது.
B - அரசாங்கத்துக்கு சமமானது.
C - அதன் உறுப்பினர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கின்றது.
D - தேசிய அரசு எனவும் அழைக்கப்படுகின்றது.
E - நிர்ப்பந்த அதிகாரத்தின் ஏகபோக உரிமையைக் கோருகின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

[பக். 2 ஐப் பார்க்க

**4.** நவீன சமூகங்களில் அரசாங்கமானது,

A - ஒரு விபரிக்க முடியாத கருத்தாகும்.
B - காலத்துக்கு காலம் மாற்றக் கூடியது.
C - ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி ஆகிய இரு வகைகளில் ஒழுங்கமைக்கக் கூடியது.
D - அரசின் முகவர்
E - அரசத்துவத்துக்கு அவசியமானதொரு மூலக்கூறு ஆகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**5.** மரபு ரீதியான கோட்பாட்டிற்கிணங்க இறைமை

A - அரசின் மீயுயர் அதிகாரத்தை குறித்து நிற்கின்றது.
B - அந்நியப்படுத்தப்பட முடியாதது.
C - தேவையானபோது பிரிக்கப்படக் கூடியது.
D - சட்டத்தின் தோற்றுவாய்.
E - ஆட்சியாளருக்கு மாத்திரமே உரித்தாகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**6.** முதலாளித்துவ கருத்தியல் குறித்து நிற்பது,

A - அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.
B - சந்தைப் பரிமாற்றங்கள் கட்புலனாகாத சக்திகளால் முகாமை செய்யப்படுகின்றன.
C - பொருளாதார வளரச்சியின் பயன்கள் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பிரிவினரையும் சென்றடையும்.
D - உற்பத்தியின் நோக்கமானது நுகர்வோரின் தேவையினை திருப்தி செய்வதாகும்.
E - சுதந்திர சந்தைப் பொருளாதாரமானது தனிநபர் சுதந்திரத்தை மேம்படுத்துகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**7.** ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் இயல்புகளில் உள்ளடங்குவது

A - நிறைவேற்று மற்றும் சட்டத்துறைக்கு தனித்தனியான தேர்தல் நடத்தப்படல்
B - சட்டத்துறையில் இருந்து விடுபட்டு நிறைவேற்றுத்துறை சுதந்திரமாக இருத்தல்
C - அரசாங்கத்தினை ஒழுங்குபடுத்துவதில் அதிகாரப் பிரிவினைத் தத்துவத்தினைப் பிரயோகித்தல்
D - கட்சி அரசியல் காரணங்களுக்காக ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்ற முடியாது என்ற தத்துவம் காணப்படுதல்
E - சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறைகளின் பதவிக் காலம் சமகாலத்தில் முடிவுறுதல்

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**8.** விஞ்ஞான சோசலிசம்

A - தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ அரசுக்கு கீழ்ப்படிய வேண்டும் என வலியுறுத்துகின்றது.
B - அரசு என்பது ஆதிக்க வர்க்கத்தின் ஒரு கருவி என குறிப்பிடுகிறது.
C - வர்க்க சமூகங்களில் அரசு காணப்படும் என வாதிடுகின்றது.
D - கம்யூனிச சமூகத்தில் அரசு உதிர்ந்து மறைந்துவிடும் என நம்புகின்றது.
E - கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோரின் கற்பிதங்களை அடிப்படையாகக் கொண்டது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**9.** ஒரு சர்வாதிகார அரசாங்கத்தின் இயல்புகளாவது

A - தாராள சமூக மற்றும் அரசியல் தரிசனம் காணப்படாமை
B - பொதுமக்களின் மனக்குறைகளை செவிமடுப்பதில் ஆர்வமின்மை
C - எதேச்சதிகார ஆட்சி
D - ஆட்சியாளர்கள் மக்களுக்கு பொறுப்புக்கூற விருப்பம் காட்டுகின்றமை
E - பொது வாழ்க்கையில் ஊடகங்களின் குறைந்தளவிலான வகிபங்கு

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**10.** சமஷ்டி அரசாங்க முறையொன்றின் கீழ்

A - மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையில் அதிகாரம் பிரிக்கப்பட்டிருத்தல்

B - மத்திய - மாநில அரசாங்கங்களுக்கிடையிலான சர்ச்சைகளை உச்ச நீதிமன்றம் மத்தியஸ்தம் செய்தல்

C - அரசியலமைப்பை திருத்துவதற்கு மத்திய - மாநில அரசாங்கங்களின் ஒத்துழைப்பு கட்டாயமானது.

D - மாநில அரசாங்கங்கள் தமக்கேயுரிய பிரத்தியேக அடையாளங்களை பாதுகாக்கும் அதேவேளை ஐக்கியப்பட்டு காணப்படும்.

E - மத்திய சட்டசபை மாநில சட்டசபைகளை மீறிச் செல்ல முடியும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**11.** தூய மந்திரி சபை அரசாங்க முறையின் இயல்புகளாவது,

A - நாம மற்றும் உண்மை நிர்வாகத்தின் பிரசன்னம்

B - அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு

C - சட்டத்துறையினை முக்கியத்துவமற்றதொரு கீழ் நிலைக்கு தள்ளுதல்

D - நிர்வாக மற்றும் சட்டத்துறைகளுக்கிடையில் அந்நியோன்ய உறவு

E - சட்டத்துறையை ஆயுட்காலம் முடியும் முன்னரேயே கலைக்கும் சாத்தியப்பாடு

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**12.** தாராள ஜனநாயக அரசாங்க முறையின் பண்புகளில் உள்ளடங்குவது

A - அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம்

B - அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் அதிகாரப் பிரிவினை

C - போட்டித்தன்மையைக் கொண்ட அரசியல் கட்சி முறைமை

D - வெகுசன ஊடகம் மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு

E - அரசியலமைப்பின் ஊடாக அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டிருத்தல்

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**13.** சட்டத்தின் ஆட்சி என்ற எண்ணக்கரு கவனம் செலுத்துவதாவது

A - சட்டத்தின் முன் சகலரும் சமன்.

B - ஆட்சியாளர்கள் மற்றும் ஆளப்படுவோர்கள் ஆகிய இரு தரப்பினரும் அரசின் சட்டங்களிற்கு கட்டாயம் கீழ்படிய வேண்டும்.

C - ஆட்சியாளர், சட்டத்தில் இருந்து விடுபடும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்.

D - கடந்த காலத்தை பாதிக்கும் சட்டங்களை உருவாக்குவது பொருத்தமற்றது.

E - குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதியாக கருதப்பட வேண்டும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**14.** மனித உரிமைகள்

A - மனித பிறவிகள் அனைவருக்கும் மனிதராக இருப்பதனால் கிடைக்கப்பெறுகின்ற உரித்துக்கள்.

B - சர்வ வியாபகத்தன்மை கொண்டவை.

C - அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமாயின் அவை சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்

D - சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாகும்.

E - ஒரு அரசின் அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மாத்திரம் ஆகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**15.** அதிகாரப் பிரிவினை எண்ணக்கரு அனுமானிப்பதானது,

A - பிரஜைகளின் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசின் அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படுவதனை தவிர்ப்பது அவசியமாகும்.

B - பிரிக்கப்பட்ட அதிகாரங்களை அரசாங்கத்தின் வேறுபட்ட துறைகள் பிரயோகிக்க வேண்டும்.

C - எதேச்சை அரசாங்கத்தை தடுப்பதற்கு தடைகள் மற்றும் சமன்பாடுகள் பொறிமுறை அவசியமாகும்.

D - தனிமுதன்மை அதிகாரம் ஊழலுக்கு வழி செய்வதில்லை

E - அதிகாரத்தை அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

- **16** தொடக்கம் **25** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **நான்கு** மட்டும் சரியான கூற்றுகளாகும். **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**16.** நவீன ஜனநாயக முறைகளில் காணப்படும் சட்டத்துறையானது
(1) சட்டத்தையும் ஒழுங்கினையும் பேணுவதற்கு சட்டங்களை உருவாக்குகின்றது.
(2) அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்கு பொது நிதியை ஒதுக்குகின்றது.
(3) ஒன்றில் ஓரங்க மன்றமாக அல்லது ஈரங்க மன்றமாக இருக்க முடியும்.
(4) பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது.
(5) மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

**17.** நீதித்துறை தொடர்பான ஜனநாயக அரசியல் மரபிற்கிணங்க
(1) அரசியலமைப்பு நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்.
(2) நீதிபதிகளின் பதவிக்காலம் கட்டாயம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.
(3) நீதிபதிகளின் சம்பளமானது அவர்களின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்பட முடியாது.
(4) நீதிபதிகள் அரசியல் ரீதியாக நடுநிலையாக இருத்தல் வேண்டும்.
(5) வழக்குகளை தீர்மானிக்கின்றபோது நீதிபதிகள் நிர்வாகத்துறையை கலந்துரையாட வேண்டும்.

**18.** அரசின் சட்டங்கள்
(1) இறைமை அதிகாரத்தின் வெளிப்பாடுகள் ஆகும்.
(2) சமூக வழக்காறுகளுக்கு ஒப்பானவை.
(3) சமூகத்தின் சகல உறுப்பினர்களையும் கட்டுப்படுத்துகின்றது.
(4) பிரஜைகளின் நடத்தைகளை கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டது
(5) ஆன்மீக வாழ்க்கைக்கு வழிகாட்டுவதில்லை

**19.** தாராள ஜனநாயக அரசியலமைப்புவாதம் வலியுறுத்துவது
(1) எந்த ஒரு நபரும் சட்டத்தை மீறிச் செல்ல முடியாது.
(2) அரசாங்கம் அதன் செயற்பாடுகளை சட்ட ரீதியாக மேற்கொள்ள வேண்டும்.
(3) அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்து அரசாங்கம் பிரஜைகளின் சுதந்திரத்தை அலட்சியம் செய்ய முடியும்.
(4) அரசியலமைப்பு, ஆட்சியாளர்களினதும் ஆளப்படுவோரினதும் கடமைகள் மற்றும் கடப்பாடுகளை வரையறுக்க வேண்டும்.
(5) ஆட்சியாளர்களினதும் அரசாங்க நிறுவனங்களினதும் நடத்தைகள் எதிர்வுகூறக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**20.** சிவில் சமூகம்
(1) அரசு என்ற பரப்புக்கு வெளியில் அமைந்துள்ளது.
(2) பிரஜைகளின் சுயாதீனமான அமைப்புகளைக் கொண்டது.
(3) ஆரோக்கியமான ஜனநாயகமொன்றிற்கான முக்கியமான கூறு ஆகும்.
(4) பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறைக்கு உள்ளீடுகளை வழங்குகின்றது.
(5) தாராள ஜனநாயகத்திற்கு ஒரு தடையாக காணப்படுகின்றது.

**21.** நவீன ஜனநாயகங்களில் காணப்படும் பிரதிநிதித்துவமானது,
(1) எதேச்சை ஆட்சிக்கு வழி செய்கின்றது.
(2) பிரஜைகளை அரசாங்கத்துடன் இணைக்கும் ஒரு வழிமுறை
(3) நேரடியல்லாத முறைகள் ஊடாக இடம்பெறுகின்றன.
(4) தேர்தல் ஊடாக இடம்பெறுகின்றன.
(5) பொறுப்பாண்மை, அதிகார ஒப்படைப்பு மற்றும் மக்கள் ஆணை ஆகிய இயல்புகளைக் கொண்டது.

**22.** ஜனநாயக அரசியலமைப்புகள்
(1) நெகிழும் மற்றும் நெகிழா, ஒற்றையாட்சி மற்றும் சமஸ்டி, ஜனாதிபதித்துவ மற்றும் பாராளுமன்ற அரசியலமைப்பு என வகைப்படுத்தப்படுகின்றன.
(2) அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உறவின் தன்மை மற்றும் உள்ளடக்கத்தை வரையறை செய்கின்றன.
(3) அரசாங்க நிறுவனங்களின் அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை வரையறை செய்கின்றன.
(4) அரசாங்கத்தினது செயற்பாடுகள் மீதான மட்டுப்பாடுகளை வரையறுக்கின்றன.
(5) அரசாங்கங்கள், ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்களுக்கு அப்பால் சென்று செயற்படுவதற்கு அனுமதிக்கின்றது.

**23.** நலன் பேணும் குழுக்கள்
(1) ஜனநாயக ஆட்சிக்கு உதவுவன.
(2) அரசியல் கட்சிகளில் இருந்து வேறுபடுத்தி இனங்காணப்பட முடியும்.
(3) அனைத்தாண்மை ஆட்சி முறைகளில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.
(4) கொள்கை வகுப்பாளர்கள் மீது செல்வாக்கு செலுத்தி தமது இலக்குகளை அடைந்து கொள்வதனை நோக்காக கொண்டவை
(5) தமது குழு உறுப்பினர்களின் நலன்களுடன் அக்கறை கொண்டவை.

**24.** ஜனநாயக முறைமைகளில் அரசியற் கட்சிகள்
(1) முக்கியமான அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டல்.
(2) அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டவை.
(3) அரசியல் முறைமைக்கு தேவையான எதிர்கால தலைவர்களை சேர்த்துக் கொள்கின்றன.
(4) அரசாங்கத்தை அமைப்பதற்கான ஊடகமாக காணப்படுகின்றன.
(5) சர்வாதிகார ஆட்சிக்கு வழிசெய்கின்றன.

**25.** பொதுக் கொள்கை
(1) தனியார் வியாபாரக் குழுக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதனை நோக்காகக் கொண்டவை.
(2) பொதுமக்களின் மனக்குறைகளை தீர்த்து வைக்கின்றது.
(3) நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர் செயற்பாடு
(4) பணியகவமைப்பின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றது.
(5) ஒரு அரசியல் முறைமையில் சட்டரீதியான அதிகாரம் கொண்டவர்களால் உருவாக்கப்படுகின்றது.

● **26** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் மட்டும் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**26.** 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் பரிந்துரைகளாவன
A - இராஜகாரிய முறையினை ஒழித்தல்
B - நிர்வாக மற்றும் சட்ட சபைகளை ஸ்தாபித்தல்
C - ஒரு பொதுவான குற்றவியல் நீதி முறைமையினை அறிமுகப்படுத்தல்
D - சகல வர்த்தக ஏகபோக உரிமைகளையும் முடிவுக்குக் கொண்டு வருதல்
E - நீதித்துறை தொடர்பான ஆளுநரின் அதிகாரத்தினை பலப்படுத்தல்

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**27.** இலங்கை தேசிய காங்கிரஸ்
A - மிதவாத அரசியல் கோரிக்கைகளை முன்வைத்தது.
B - உள்ளூர் மக்களுக்கு பிரித்தானியர் சாம்ராஜ்ஜியத்தின் கீழ் சம அங்கீகாரத்தைக் கோரியது.
C - சாதி, மதம் மற்றும் இன அடையாளங்களின் அடிப்படையில் பிளவுபட்டிருந்தது.
D - அரசியல் சுதந்திரத்திற்காக சாதாரண பொதுமக்களை அணிதிரட்டியது.
E - பிரித்தானிய ஆட்சியாளர்களின் உடனடி வெளியேற்றத்தை கோருவதில் இருந்து விலகி நின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**28.** டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம்
A - சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்தியது.
B - நிர்வாகக்குழு முறைமையினை ஸ்தாபித்தது.
C - உள்ளூர் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தில் பங்குபற்றுவதற்கு வழிகோலியது.
D - மூன்று அரச உத்தியோகத்தர்களும் பிரித்தானிய ஏகாதிபதியத்தின் நலன்களை பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்த்தது.
E - ஆளுநரை அரசாங்கத்தின் நாம நிர்வாக தலைவராக மாற்றியது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**29.** சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம்
A - எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கவும் இல்லாது செய்யவும் அதிகாரம் கொண்டிருந்தது.
B - பிரித்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்திய மகாதேசாதிபதி, செனற்சபை மற்றும் சனப்பிரதிநிதிகள் சபை என்பவற்றைக் கொண்டிருந்தது.
C - தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
D - அதனுடைய சட்டவாக்க அதிகாரத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.
E - ஓர் இரு மன்ற சட்ட சபையாகக் காணப்பட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**30.** முதலாம் குடியரசு யாப்பின் கீழ் ஜனாதிபதி
A - அரசின் நாம நிர்வாகத்தின் தலைவராக காணப்பட்டார்.
B - பிரதமரால் நியமிக்கப்பட்டார்.
C - தேசிய அரசுப் பேரவையில் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கப்பட முடியும்.
D - பதவிக் காலத்தின்போது சட்டத்தில் இருந்து விடுபடும் உரிமையைக் கொண்டிருந்தார்.
E - தேசிய அரசுப் பேரவையினைக் கூட்டுவதற்கும் கலைப்பதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**31.** 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை
A - நிர்வாக, சட்ட மற்றும் நீதித்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தது.
B - அரசின் மீயுயர் நிறுவனமாகக் காணப்பட்டது.
C - பொதுச் சேவையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
D - ஓரங்க சட்ட சபையாகக் காணப்பட்டது.
E - அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு பதிலளிக்க கடமைப்பட்டிருந்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**32.** 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் புதிய அம்சங்களில் உள்ளடங்குவன
A - அரசியலமைப்பு நீதிமன்றம்
B - விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
C - அடிப்படை உரிமை மீறலுக்கான சட்டரீதியான பரிகாரம்
D - ஒம்புட்ஸ்மன்
E - அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதி
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**33.** ஐக்கிய அமெரிக்காவின் சமஸ்டி முறைமை
A - ஐம்பது மாநிலங்களையும் மத்திய அரசாங்கத்தையும் கொண்டது.
B - பகிரப்பட்ட இறைமையை பண்பாகக் கொண்டுள்ளது.
C - எஞ்சிய அதிகாரங்களை மாநில அரசாங்கங்களுக்கு வழங்குவதற்கு வழி செய்துள்ளது.
D - மாநிலங்கள் சமஸ்டி உறுப்புரிமையில் இருந்து விலகிக்கொள்வதற்கு வழி செய்துள்ளது.
E - முன்னைய கூட்டு சமஸ்டி முறையினை மீள மாற்றீடு செய்துள்ளது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

[பக். 7 ஐப் பார்க்க

**34.** பிரித்தானிய சம்பிரதாயத்தை தழுவிய பாராளுமன்ற அரசாங்க முறைக்கு இணங்க,
A - அரசாங்கம் மீது மகாராணி பெயரளவிலான அதிகாரங்களை மாத்திரமே கொண்டுள்ளார்.
B - பாராளுமன்றம் எதிர்கால பாராளுமன்றம் ஒன்றினை கட்டுப்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.
C - இரண்டாம் சபை பாராளுமன்றத்தின் ஓர் அங்கம் அல்ல.
D - பிரதமர் சமனானவர்கள் மத்தியில் முதலிடத்தில் காணப்படுவார்.
E - பாராளுமன்றத்திற்கு எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கவும் இல்லாது செய்யவும் முடியும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**35.** உலகமயமாக்கல்
A - நவீன அரசுகளின் இறைமை அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது.
B - நவ தாராள பொருளாதார சீர்திருத்தங்களின் வருகையால் ஏற்பட்டதாகும்.
C - நவீன அரசுகள் ஒரு சமஸ்டி அரசாக இருக்க வேண்டும் என முன்மொழிகின்றது.
D - நாடு கடந்த தேசங்களின் வலையமைப்புடன் கூடிய ஒரு புதிய முறையாகும்.
E - தேசிய அரசுகளின் அதிகாரத்தை சர்வதேச மூலதனப் பாய்ச்சலின் மூலம் கட்டுப்படுத்துகின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

- **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்புடைய ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **பிழையான** கூற்றுத் தொகுதியினைத் தெரிவுசெய்க.

**36.** தற்போதைய சர்வதேச முறைமையில்
A - ஐக்கிய நாடுகள் சபை உலக அரசாங்கமாக தொழிற்படுகின்றது.
B - சகல நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவை உலகத் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளன.
C - இந்தியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாகியுள்ளன.
D - ஐக்கிய நாடுகள் சபை உலகின் கூட்டு பாதுகாப்புக்கு பொறுப்பாக காணப்படுகின்றது.
E - சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் ஒரு கூட்டு சமஸ்டி அரசாங்கத்தை உருவாக்கியுள்ளன.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**37.** சமகால சர்வதேச முறைமை அடையாளப்படுத்தப்படுவது,
A - ஐக்கிய நாடுகள் சபைக்கு தமது இறைமை அதிகாரத்தை ஒப்படைத்துள்ள தேசிய அரசுகளைக் கொண்ட ஒரு முறைமை
B - பெரிய மற்றும் சிறிய அரசுகளுக்கிடையில் போர் இல்லாத சமாதான சகவாழ்வு
C - சீனாவை புதிய உலக வல்லரசாக சகல நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளமை
D - ஒரு பல்துருவ உலக ஒழுங்கு
E - ஒரு இருதுருவ உலக ஒழுங்கு
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**38.** சுவிற்சர்லாந்து அரசியலமைப்பு மாதிரி
A - ஓர் அரைகுறை சமஷ்டி முறை
B - வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க முறைக்கான தற்போதைய நடைமுறை உதாரணம்
C - கூட்டு நிர்வாக முறையினை நிராகரிக்கின்றது.
D - கன்டோன்களின் சட்டங்களின் அரசியலமைப்பு தன்மையினைத் தீர்மானிப்பதற்கு சமஷ்டி நீதிமன்றத்தை வலுப்படுத்துகின்றது.
E - கன்டோன்களுக்கான அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி வழங்குகின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**39.** இலங்கையின் மாகாண சபைகள் முறைமை

A - நாட்டினை சமஷ்டி அரசாங்க முறைமையொன்றுக்கு நிலைமாற்றம் செய்துள்ளது.
B - நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
C - செனற் சபை ஒன்றினை உருவாக்கியுள்ளது.
D - ஆளுநர் தலைமை தாங்கும் அமைச்சர்கள் சபையினை உருவாக்கியுள்ளது.
E - மாகாண சபைகளுக்கு முழுமையான சட்டவாக்க அதிகாரத்தை வழங்கியுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**40.** நவீன ஜனநாயக நாடுகளில் கலப்பு நிர்வாக முறை

A - ஜனாதிபதித்துவ மற்றும் கபினட் அரசாங்க முறைகளின் கலப்பினை அனுமதிப்பதில்லை
B - பிரதமர் அவசியமானபோது ஜனாதிபதியை மீறிச் செல்வதற்கு அனுமதிக்கின்றது.
C - ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஓர் அமைச்சரவைக்கு வழிகோலுகின்றது.
D - ஜனாதிபதி தனது விருப்பின் பெயரில் அமைச்சர்களை தெரிவுசெய்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.
E - சட்டசபையின் நம்பிக்கையின்றி அமைச்சரவையின் இருப்பிற்கு வாய்ப்பளிக்கின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

● **41** தொடக்கம் **45** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் அவற்றின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **ஒரு** கூற்று **பிழையானதாகும்**. **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**41.** அரை-குறை சமஷ்டி அரசாங்க முறை

(1) ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டிப் பண்புகளைக் கொண்டுள்ளது.
(2) பிரான்ஸ் மற்றும் இலங்கையில் காணப்படுகின்றது.
(3) இந்தியாவில் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.
(4) மத்திய மற்றும் மாநில மட்டத்தில் இரண்டு குடியுரிமைகளைக் கொண்டிருப்பதற்கு வழி செய்வதில்லை.
(5) அவசரகால நிலைமையின்போது ஒற்றையாட்சி அரசாங்கமாக செயற்பட முடியும்.

**42.** ஐரோப்பிய ஒன்றியம்

(1) பெரிய பிரித்தானியாவின் அங்கத்துவம் தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றது.
(2) ஐரோப்பிய அரசுகளுக்கிடையில் ஒத்துழைப்பினை அடைந்துகொள்வதனை நோக்கிச் செயற்படுகின்றது.
(3) அதனுடைய தலைமைக் காரியாலயம் பிரசல்சில் அமைந்துள்ளது.
(4) பொதுவான பாராளுமன்றத்தைக் கொண்ட அரசுகளுக்கிடையிலான அமைப்பாகும்.
(5) ஒரு மனிதாபிமான ஒழுங்கமைப்பாகும்.

**43.** காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவம்,

(1) இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது பிரதிநிதித்துவ முறையாக காணப்பட்டது.
(2) சிறுபான்மை இனத்தவர்களால் ஆதரிக்கப்பட்டது.
(3) பிரித்தானிய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் கொள்கையின் ஒரு விளைவாக காணப்பட்டது.
(4) சிறந்ததொரு ஜனநாயக பிரதிநிதித்துவ முறையாக கருதப்படுகின்றது.
(5) டொனமூர் சீர்திருத்தங்களின் அறிமுகத்துடன் இல்லாதொழிக்கப்பட்டது.

**44.** இலங்கையின் தற்போதைய அரசியலமைப்புப் பேரவை,

(1) 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.
(2) 10 உறுப்பினர்களைக் கொண்டது.
(3) பாராளுமன்றத்தின் சபாநாயகரை அதனுடைய தலைவராக கொண்டுள்ளது.
(4) பொதுச் சேவையின் சுயாதீனத் தன்மையினை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டது.
(5) ஜனாதிபதி உயர் அதிகாரிகளை தனது தற்துணிபில் நியமிப்பதற்கு அனுமதிக்கின்றது.

**45.** இலங்கையின் உள்ளூராட்சி அரசாங்க முறை,

(1) ஆட்சிமுறைக் கட்டமைப்பின் மூன்றாவது மட்டமாக காணப்படுகின்றது.
(2) ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை கொண்டுள்ளது.
(3) கலப்பு தேர்தல் முறையின் ஊடாக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு வழி செய்துள்ளது.
(4) மத்திய அரசாங்கத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றது.
(5) உள்ளூர் ஜனநாயகத்தை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **46** தொடக்கம் **50** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவுசெய்து **பொருத்தமாக விடைத்தாளிற் குறிப்பிடுக.**

| **இலக்கம்** | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| **46.** | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பிற்கான 19 வது சீர்திருத்தத்தின்படி ஜனாதிபதியால் பிரதமர் நியமிக்கப்படுகின்றார். | பாராளுமன்றத்தில் அதிக நம்பிக்கையைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியால் பிரதமராக நியமிக்கப்படல் வேணடும். |
| **47.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 18 வது சீர்திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களை பலவீனப்படுத்தியது. | 18 வது அரசியலமைப்பு சீர்திருத்தம் ஜனாதிபதியினுடைய பதவி தவணைக்கால மட்டுப்பாட்டினை நீக்கியது. |
| **48.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 வது சீர்திருத்தம் மாகாணசபை முறையினை அறிமுகம் செய்தது. | மாகாணசபை முறை எல்லா வழிகளிலும் இந்திய சமஷ்டி முறைக்கு ஒப்பானது. |
| **49.** | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு இரு மன்றங்களைக் கொண்ட சட்டசபைக்கு வழிசெய்தது. | இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் குழு உரிமையினை அங்கீகரித்துள்ளது. |
| **50.** | 1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பானது பொதுத் தேர்தலுக்கு விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார முறையினை அறிமுகம் செய்தது. | விகிதாசார பிரதிநிதித்துவ முறையானது கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தியுள்ளது. |

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **23**

විෂයය / பாடம்: **அரசியல் விஞ்ஞானம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 1 | 31. | 1 | 41. | 2 |
| 02. | 1 | 12. | 2 | 22. | 5 | 32. | 5 | 42. | 5 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 3 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 5 | 14. | 1 | 24. | 5 | 34. | 3 | 44. | 5 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 1 | 35. | 3 | 45. | 4 |
| 06. | 5 | 16. | 4 | 26. | 1 | 36. | 2 | 46. | 5 |
| 07. | 1 | 17. | 5 | 27. | 2 | 37. | 2 | 47. | 1 |
| 08. | 5 | 18. | 2 | 28. | 1 | 38. | 2 | 48. | 2 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 5 | 39. | 4 | 49. | 4 |
| 10. | 1 | 20. | 5 | 30. | 1 | 40. | 3 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

19.08.2019 / 1300 – 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி A | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

✳ இவ் வினாத்தாள் **A, B, C** என்ற **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

✳ **பகுதி A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். இந்த பகுதியிலுள்ள **சகல** வினாக்களுக்குமான குறு விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

✳ பகுதி **B** யிலிருந்தும் **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.** பண்டைய கிரேக்கர் காலத்தில் இருந்து நவீன காலம் வரைக்கும் ஜனநாயகம் அதனுடைய பரிணாம வளர்ச்சியில் இரண்டு வடிவங்களைக் கொண்டமைந்துள்ளது. அவ்வடிவங்கள் **இரண்டும்** எவை?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**2.** பண்டைய கிரேக்கத்தின் அரசியல் சிந்தனையாளர்கள் இருவர் அரசியற் கற்கையினுடைய ஸ்தாபகர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் **இருவரினதும்** பெயர் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**3.** அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்களித்த இந்திய அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் சீன அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) இந்தியா : ..............................................................................................

(2) சீனா : ..............................................................................................

**4.** இரண்டு பிரித்தானிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் 'இயற்கை நிலை' தொடர்பாக இரண்டு வேறுபட்ட வழிமுறைகளில் விவரித்துள்ளார்கள். அவர்கள் **இருவரினதும்** பெயர் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**5.** அரசியலமைப்புகளில் திருத்தம் மேற்கொள்கின்ற செயன்முறையின் கடினத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவை இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. அந்த **இரு** வகைகளினதும் பெயர் தருக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**6.** இலங்கையில் பின்வரும் இரு அரசியல் நிறுவனங்களையும் உருவாக்கிய **இரு** அரசியலமைப்புகளும் எவை?

(1) ஓர் ஈரங்க சட்டசபை :..........................................................................................

(2) ஓம்புட்ஸ்மன் :..........................................................................................

**7.** பின்வரும் தத்துவங்களை வலியுறுத்துகின்ற **இரு** அரசியல் முறைகளைப் பெயரிடுக.

(1) சுதந்திரம், உயிர் வாழ்தல் மற்றும் தனியார் சொத்து தொடர்பான உரிமைகள்

..........................................................................................

(2) சொத்து தொடர்பான கூட்டுடைமை

..........................................................................................

**8.** பின்வரும் கூற்றுக்கள் அரசு பற்றிய இரண்டு கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றன. அவை எவை?

(1) அரசு ஒரு படிமுறை செயன்முறையினூடாக எழுச்சிபெற்றது.

..........................................................................................

(2) அரசு தனியார் சொத்துடமையின் தோற்றத்துடன் எழுச்சிபெற்றது.

..........................................................................................

**9.** பின்வரும் எண்ணக்கருக்களை அறிமுகஞ்செய்த **இரு** அரசியற் சிந்தனையாளர்களின் பெயர் குறிப்பிடுக.

(1) தத்துவார்த்த ஆட்சியாளன் :..........................................................................................

(2) பொது விருப்பம் :..........................................................................................

**10.** கி.பி. 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அறிமுகம் செய்யப்பட்ட இரு திருத்தங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களை பின்வரும் இருவேறுபட்ட வழிமுறைகளில் மாற்றியது. அந்த திருத்தங்கள் எவை என குறிப்பிடுக.

(1) ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பலப்படுத்தியது

..........................................................................................

(2) ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது

..........................................................................................

**11.** கீழே தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களும் இரு அரசியல் நிறுவனங்களைக் குறிப்பிடுகின்றன. அவற்றின் பெயர் குறிப்பிடுக.

(1) தேர்தல்களின் ஊடாக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்ட ஒழுங்கமைப்புகள்

..........................................................................................

(2) பொது ஆர்ப்பாட்டங்கள் ஊடாக தமது நோக்கங்களை அடைந்துகொள்ள முயலும் ஒழுங்கமைப்புகள்

..........................................................................................

**12.** (1) ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசாங்கத்தின் சட்டசபையினுடைய உத்தியோகபூர்வ பெயர் என்ன?

..........................................................................................

(2) இந்திய பாராளுமன்றத்தினுடைய மேற்சபையின் உத்தியோகபூர்வ பெயர் என்ன?

..........................................................................................

**13.** (1) காலனித்துவ இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையினை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................................................

(2) காலனித்துவ இலங்கையில் நிர்வாகக் குழு முறையினை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................................................

**14.** பாசிச கருத்தியலை முன்னின்று ஆதரித்த **இரு** ஐரோப்பிய அரச தலைவர்களின் பெயர் தருக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**15.** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் மகாணசபைகள் உருவாக்கப்பட்டபொழுது மூன்று விடயப் பட்டியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் எவையேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**16.** ஒற்றையாட்சி அரசாங்கத்தின் **இரண்டு** இயல்புகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**17.** அரசியலைக் கற்பதற்கான **இரு** நவீன அணுகுமுறைகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**18.** (1) ஐக்கிய நாடுகள் சபையில் உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான பிரதான நிறுவனம் எது?

..........................................................................................

(2) ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகளுக்கு பொறுப்பான நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

..........................................................................................

**19.** ஜனநாயக சமூகங்களில் சிவில் சமூகத்தின் **இரு** பணிகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**20.** (1) இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியினைக் குறிப்பிடுக.

..........................................................................................

(2) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை கருத்தியலைக் குறிப்பிடுக.

..........................................................................................

# அரசியல் விஞ்ஞானம் II
# பகுதி A

## 01 - 20 வரையுள்ள ஒவ்வொரு குறு வினாவுக்குமுரிய விடைகள்

**வினா இல : 01**

1. நேரடி ஜனநாகயம் / நேரடி
2. மறைமுக ஜனநாயகம் / பிரதிநிதித்துவ ஜனநாயகம் / நேரில் / மறைமுக / பிரதிநிதித்துவ

**வினா இல : 02**

1. பிளேட்டோ
2. அரிஸ்டோட்டில்

**வினா இல : 03**

1. இந்தியா – கௌடில்யர் / சாணக்கியர் / மனுதர்மம்
2. சீனா – கென்பூசியஸ் / லாவோ– சி

**வினா இல : 04**

1. தோமஸ் ஹொப்ஸ் / ஹொப்ஸ்
2. ஜோன் லொக் / லொக்

**வினா இல : 05**

1. நெகிழும் யாப்பு / நெகிழும்
2. நெகிழா யாப்பு / நெகிழா

**வினா இல : 06**

1. சோல்பரி அரசியலமைப்பு / சோல்பரி அரசியல் அமைப்பு 1947 / 1947 அரசியலமைப்பு / 1948 சோல்பரி அரசியல் அமைப்பு
2. 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு / இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு /1978 அரசியலமைப்பு / 78 அரசியலமைப்பு / 1978 / இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு

**வினா இல : 07**

1. தாராண்மைவாதம் / தாராண்மை ஜனநாயகம் / ஜனநாயகம் / லிபரல் ஜனநாயகம் / தாராளவாதம் / லிபரல்
2. சமவுடமை / சமதர்மம் / சோஸலிஸம் / கொம்யூனிசம்

**வினா இல : 08**

1. அரசு பற்றிய பரிணாம வளர்ச்சி கோட்பாடு / அரசு பற்றிய சமூக பரிணாம வளர்ச்சி கோட்பாடு / பரிணாம வளர்ச்சி கோட்பாடு / பரிணாமவாதம் / படிமுறை வளர்ச்சி
2. மார்க்சிஸம்

**வினா இல : 09**

1. பிளேட்டோ
2. ஜீன் ஜக்கி ரூஸோ / J.J ரூஸோ

**வினா இல : 10**

1. 18வது திருத்தம் / 18
2. 17 வது திருத்தம் / 17
   19 வது திருத்தம் / 19

**வினா இல : 11**

1. அரசியல் கட்சிகள் / கட்சிகள்
2. அமுக்கக் குழுக்கள் / சிவில் சமூகம் / சிவில் சமூக இயக்கங்கள் / சமூக இயக்கங்கள் / நலன்பேண் குழுக்கள் / தொழிற்சங்கம்

**வினா இல : 12**

1. காங்கிரஸ்
2. இராஜ்ய சபா

**வினா இல : 13**

1. 1910 குறு-மக்கலம் சீர்த்திருத்தம் / குறு-மக்கலம் / 1910 / 1911 / 1912
2. டொனமூர் சீர்த்திருத்தம் / டொனமூர் அரசியல் சீர்த்திருத்தம் 1931 / சீர்த்திருத்தம் 1931

**வினா இல : 14**

1. பெனிடோ முசோலினி / முசோலினி
2. அடோல்ப் ஹிட்லர் / ஹிட்லர்
3. பிராங்கோ / பிரான்சிகோ பிராங்கோ

**வினா இல : 15**

1. மாகாண சபை நிரல் / மாகாண பட்டியல் / மாகாணம் / முதலாம் பட்டியல்
2. மத்திய நிரல் / மத்திய அரசாங்க நிரல் / ஒதுக்கிய நிரல் / ஒதுக்கிய / இரண்டாம் பட்டியல்
3. பொதுப்பட்டியல் / ஒத்தியங்கு பட்டியல் / இணைந்த பட்டியல் / இணைப்புப் பட்டியல் / முன்றாம் பட்டியல்

**வினா இல : 16**

1. மத்திய அரசாங்கத்தின் மீயுயர் தன்மை
2. ஒரு அரசாங்கம் மட்டும் காணப்படல்
3. ஒற்றைக் குடியுரிமை
4. மாநில சட்டசபை காணப்படாமை
5. சட்ட, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் குவிந்திருத்தல்.
6. இறைமை பிரிபடாது ஓரிடத்தில் இருத்தல்
7. மத்திய அரசாங்கத்துக்கு இணையான அதிகாரம் கொண்ட சட்ட சபை காணப்படாமை.

**வினா இல : 17**

1. நடத்தை வாத அணுகுமுறை / நடத்தை வாதம்
2. விஞ்ஞான அணுகுமுறை / விஞ்ஞானம் / நடத்தைவாதம் / நடத்தைவாத அணுகுமுறை
3. சமூகவியல் அணுகுமுறை
4. முறைமை அணுகுமுறை / முறைமை கோட்பாடு / முறைமை பகுப்பாய்வு முறை
5. புள்ளிவிபரவியல் அணுகுமுறை

6. பல்துறைசார் அணுகுமுறை / பன்மைத்துவ அணுகுமுறை / இடையியல்சார்
7. பெண்ணியல் அணுகுமுறை
8. பின் நவீனத்துவ அணுகுமுறை
9. சமகால ஒப்பீட்ட அணுகுமுறை
10. அரசியல் – பொருளாதார அணுகுமுறை

**வினா இல : 18**

1. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை / பாதுகாப்புச் சபை
2. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை / UNHRC / மனித உரிமை சபை / மனித உரமைப் பேரவை / மனிதவுரிமைக் கவுன்சில் / மனிதவுரிமைக் கமிசன்

**வினா இல : 19**

- ஆலோசனை / கொள்கை ஆதரவு பிரசாரம் / நியாயப் பிரசாரம்
- பிரஜைகளை வலுவூட்டல்
- மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தல்
- அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல்
- எதிர் அதிகாரமாக செயற்படல்
- ஜனநாயகத்தின் காவல் நாயாக செயற்படல்
- பிரசைகளின் ஒட்டுமொத்த சமூக வாழ்க்கையினை வழிநடத்தல்
- பிரசைகளை சுயாதீனமாக ஒழுங்கமைத்தல்
- அரசியல் அறிவூட்டல்
- கொள்கை வழிகாட்டல் / கொள்கை ஆதரவு பிரசாரம்

**வினா இல : 20**

1. LSSP / இலங்கை சமசமாஜ கட்சி
2. அணிசேராக் கொள்கை / அணிசேராமை / கூட்டுச் சேரா கொள்கை

# அரசியல் விஞ்ஞானம் II

## பகுதி B

**வினா இலக்கம் 01 :**

**அரசியல் விஞ்ஞானத்தை கற்பதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இவ்வினாவானது அரசியல் விஞ்ஞானத்தை கற்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் தொடர்பாக விளக்குவதற்கு பரீட்சார்த்திகளிடம் காணப்படும் விடய அறிவு மற்றும் விமர்சன திறன்களை மதிப்பிட முற்படுகின்றது.

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

விடையானது அரசியல் என்றால் என்ன என்பதை வரையறுப்பதுடன், அது மனித வாழ்வின் ஒரு முக்கியமான அங்கம் என்பதனையும், அது எமது சமூகவாழ்வில் எங்கும் பரவியுள்ளது என்பதனையும் அரசியலிலிருந்து எவரின் வாழ்க்கையையும் பிரித்து வைக்க முடியாது என்பதனையும் குறிப்பிட்டு விடை யினை ஆரம்பிக்க முடியும்.

அரசியல் தோற்றப்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக, புலமைசார் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பதே அரசியல் விஞ்ஞானமாகும்.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குதல்
- அரசியல் என்பது மனித வாழ்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதனால் அதனை முறையாக கற்பது அவசியமாகும்.
- தாம் வாழும் அரசியல் முறையின் அரசியல் கட்டமைப்பு, அரசியல் நிறுவனங்கள், அரசியல் நிகழ்வுகள், பகுப்பாய்வுகள் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ளவும் பகுப்பாய்வு செய்யவும் இருக்கின்ற திறமைகள்.
- அரசியலை முறையாக, விஞ்ஞானரீதியாக கற்பதன் மூலம் மாணவர்கள் மனித விழுமியங்களை வளர்த்துக் கொள்வதற்கும் அதன் மீதான அர்ப்பணிப்பை கட்டியெழுப்புவதற்கும் முடியும்.
- அரசியல் கருத்தியல், அரசியல் தத்துவங்கள் மற்றும் அரசியல் கோட்பாடுகளை கற்பதன் மூலம் மாணவர்கள் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடிகின்றமையும் அறிவினை கூர்மையாக்கிக் கொள்ளலும்.
- அரசியல் பகுப்பாய்வு மற்றும் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் திறனைப் பெற்றுக் கொள்ளல்.
- அரசியல் மூலக்கொள்கைகள், அரசியல் விழுமியங்கள் போன்றவற்றை விளங்கிக் கொள்வதன்மூலம் பிரஜைக்குரிய பண்புகள் விருத்தியடைதல்.
- அரசியல் சமூகமயப்படுவதற்கும் ஒழுங்கமைவதற்குமான தெளிவு மற்றும் வழிகாட்டல்கள் கிடைக்கின்றமை.

- இராஜதந்திர சேவைகளுக்கு அவசியமான அறிவினைக்கொண்ட படித்த பிரசைகளை உருவாக்க முடிகின்றமை.

- அரசியலின் அனைத்து பிரிவுகளையும் கற்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றமையினால் தொழில்சார் அரசியல்வாதியாகவும் நிருவாகியாகவும் வர எதிர்ப்பார்க்கின்றவர்களுக்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சிகள் கிடைக்கின்றமை.

- அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆவதற்கு மற்றும் அரசியல் நியாயப் பிரசாரசாரங்களை மேற்கொள்வதற்கு.

இதற்கும் மேலதிகமான விடயங்களை மாணவர்கள் குறிப்பிட்டிருப்பார்களாயின் பொருத்தமான புள்ளிகளை வழங்க முடியும்.

**(கலந்துரையாடல் மற்றும் விவரிப்பிற்கான புள்ளிகள் 14 ஆகும்)**

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

அரசியல் விஞ்ஞானத்தை கற்பது என்பது உலகில் மிக பழைய சம்பிரதாயமாகவும் நடைமுறையாகவும் உள்ளது. அது பிரசித்தி பெற்ற அரசியல் சிந்தனையாளர்கள் மற்றும் இராஜ தந்திரிகள் இருந்த பண்டைய இந்தியா, சீனா, கிரேக்கம் ஆகிய நாடுகளில் ஆரம்பித்தது. அதன் ஆய்வானது 3000 ஆண்டுகளுக்கு ( 30 நூற்றாண்டுகள் ) மேலாக நிலைத்திருப்பதன் மூலம் அதன் அறிவார்ந்த மற்றும் பிரயோக முக்கியத்துவம் என்பன தெளிவாகின்றது.

**குறிப்பு**

பரீட்சார்த்திகள் தமது விடையில் அரசியல் விஞ்ஞானத்தை கற்பதன் முக்கியத்துவத்திற்கு நடைமுறை வாழ்க்கை உதாரணங்களை குறிப்பிட்டு இருப்பார்களாயின் அத்தகைய பரீட்சார்த்திகளுக்கு அதிக புள்ளிகள் வழங்கவும்.

## வினா இலக்கம் 02 :

**அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாடு அல்லது மார்க்சிசக் கோட்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இந்த வினா அரசியல் வாழ்க்கையிலும் அரசியல் விஞ்ஞானத்திலும் ஒரு முக்கிய விடயமாக இருக்கின்ற அரசைப் பற்றிய பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான புரிதலை ஆராய விரும்புகிறது. பரீட்சார்த்திகள் கோட்பாடுகள் இரண்டில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டும்.

### 2.1 அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாடு

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

நவீன உலகில் அரசின் இயல்பு மற்றும் அதன் பணிகள் தொடர்பாகவும், அரசு என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வதற்கு காணப்படும் அடிப்படையான கோட்பாடொன்றாக தாராண்மைவாதத்தை முன்வைத்து விடையினை ஆரம்பிக்க முடியும். தாராண்மைவாத சிந்தனையில் அரசு பற்றிய தனியான தொரு கோட்பாடு காணப்படவில்லை என்பதையும் தாராண்மைவாத கோட்பாட்டு மற்றும் தத்துவார்த்த மரபுகளில் அரசு பற்றிய பல்வேறு அணுகுமுறைகள் காணப்படுகின்றன என்பதையும் 'அறிமுகத்தில்' சுட்டிக் காட்ட வேண்டும்.

**கலந்துரையாடல்** **(14 புள்ளிகள்)**

- அரசு பற்றிய தாராளவாத கோட்பாடு 17 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இது முடியாட்சி மற்றும் நிலப் பிரபுத்துவ சமூக-பொருளாதார ஒழுங்கின் வீழ்ச்சி, முதலாளித்துவ சமூக-பொருளாதார அமைப்பின் வளர்ச்சி என்பவற்றின் வரலாற்று பின்னணியில் ஐரோப்பாவில் தோன்றியது.

- அரசு பற்றிய தாராளவாத அரசியல் கோட்பாட்டின் ஸ்தாபக சிந்தனையாளர்களாக ஜோன் லொக், ஜீன் ஜக்கி ரூசோ, இம்மானுவேல் கான்ட், ஜான் ஸ்டுவர்ட் மில், மொண்டெஸ்கியூ மற்றும் ஜெரமி பெந்தம் போன்றவர்கள் காணப்பட்டார்கள்

- அரசு தொடர்பான மரபு ரீதியான தாராண்மைவாத கோட்பாடு ஜோன்லொக், ஜோன் ஸ்டுவர்ட்மில், மொன்டஸ்கியூ மற்றும் காண்ட் போன்றவர்களின் கற்பித்தல்களில் இருந்து பெறப்பட்டுள்ளது.

- தாராளவாதக் கோட்பாடு அரசை விளக்குவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகும். லொக், ரூசோ மற்றும் காண்ட் போன்றோர் இதனைப் பயன் படுத்தினர்.

- மேற்கண்ட சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்ட அரசு பற்றிய தாராளவாத கோட்பாட்டின் முக்கிய கருத்துக்களை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்:

(i) அரசு என்பது சமூகத்தின் உருவாக்கம். இது கடவுளினாலோ அல்லது மனித சமுதாயத்திற்கு வெளியே எந்த சக்திகளினாலுமோ உருவாக்கப்படவில்லை. மனிதர்கள் தங்கள் வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் அனைவருக்குமான பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இதை உருவாக்கியுள்ளனர்.

(ii) மனிதர்கள் தமக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் விளைவாக அரசை உருவாக்கி னர். அந்த ஒப்பந்தத்தின் கீழ் மக்கள் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் தங்கள் சொந்த இறையாண் மையை ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கின்றனர். அதனால் இறைமையானது ஆட்சியாளர்களிடமன்றி மக்களிடமே காணப்படுகின்றது.

(iii)அரசின் அடிப்படைக் கடமை மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். பிரசைகளின் அந்த உரிமையை மீறுவது அரசு மற்றும் சமூகத்திற்கிடையிலான சமூக ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

(iv)பொருளாதாரத்தின் செயற்பாட்டில் அரசு தலையிடக்கூடாது. பொருளாதாரப் பரப்பு அரசாங்க கட்டுப்பாடு மற்றும் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும். இந்த கொள்கை தாராளவாதக் கோட்பாட்டில் 'தலையிடா அரசு' என்று அழைக்கப்படுகிறது.

(v) அரசின் அரசியல் அதிகாரம் மக்களை அடக்குவதற்கோ அல்லது கொடுங்கோன்மையாகவோ பயன் படுத்தக்கூடாது. இது வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு அரசாங்கத்தையும் சட்டமன்றத் தையும் வேண்டி நிற்கின்றது. இது லொக் உருவாக்கிய கருத்தாகும்.

- அரசு பற்றிய இந்த மரபுரீதியான தாராளவாதக் கோட்பாடு 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து மாறத் தொடங்கியது. ஜெரமி பெந்தம் உருவாக்கிய பயனுடமைக் கோட்பாடு அதிக எண்ணிக்கையிலான மக்களின் அதிக மகிழ்ச்சியை உறுதி செய்வதற்காக அரசாங்கம் கொள்கைகளை வடிவமைத்து சட்டத்தை இயற்ற வேண்டும் என்று வாதிட்டது.

- பின்னர் ரி.எச்.கிரீன் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தாராளவாத சுதந்திர சந்தைக் கோட்பாட்டை திருத்தியமைத்தார். புதிய அணுகுமுறையின்படி சமூக–பொருளாதார சீரமைப்புகளுக்காக அரசு தீவிரமாக தலையிட வேண்டும். இந்த புதிய அணுகுமுறை நவீன தாராண்மைவாதம் (new or modern liberalism) என்று அழைக்கப்பட்டது.

- இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசு பற்றிய தாராளவாத அரசியல் அணுகுமுறையில் சமூக பொதுநலவாதமும் சேர்ந்து கொண்டது.

- அரசு பற்றிய நவ தாராளவாதக் கோட்பாடு (Neo - Liberalism) 1980 களில் இருந்து வளர்ந்தது. இது அரசின் மரபுரீதியான தாராளவாத கோட்பாட்டை மீண்டும் அரசியல் கோட்பாட்டிற்குள் கொண்டு வரவே முய–ற்சித்தது பட்டது. அதன் முக்கிய கோட்பாட்டாளர்களாக பிரீடெரிச் ஹெயக், றொபர்ட் நொக்ஸ் மற்றும் மில்டன் பிரீட்மேன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

- சமகால சுதந்திர சந்தை பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் உலகமயமாக்கலின் கீழான அரச சீர்திருத்–தங்களுக்கும் வழிகாட்டும் கோட்பாடாக நவ தாராளவாதக் கோட்பாடு காணப்படுகின்றது. அரசு பற்றிய நவ தாராளவாதக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்கள் பின்வருமாறு:

(i) அரச கட்டுப்பாடு மற்றும் தலையீட்டிலிருந்து சந்தை விடுபட வேண்டும். அதனை தாராளவாத அரசு உறுதிப் படுத்த வேண்டும்.

(ii) சமூகப் பொதுநலன் மற்றும் வருமானத்தை மீளப்பகிர்ந்தளிப்பதில் அரசு ஈடுபடக்கூடாது. இந்த பணிகளை சந்தைகளிடம் விட்டுவிட வேண்டும்.

(iii) பொருளாதாரத்தின் அரசதுறைப் பொருளாதாரம் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது அதன் அளவைக் குறைக்க வேண்டும். ஆகையால் அரச நிறுவனங்களின் அளவினை குறைக்க வேண்டும். அது அரசு புதிய சந்தையுடன் போட்டியிட வழிவகுக்கும் என தாராளவாதிகள் வாதிக்கின்றனர்.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

கலந்துரையாடலின் மூலம் உருவாக்கப்பட்ட முக்கிய விடயங்களின் சுருக்கத்துடன் முடிவுரை தொடங்கு கிறது. இதில் வலியுறுத்தக்கூடிய சில விடயங்கள் உள்ளன:

i. தாராளவாத அரசுக் கோட்பாடு 200 ஆண்டு கால பரிணாம வளர்ச்சியில் உருவாகியுள்ளது.
ii. இது பெரும்பாலான நவீன ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்துள்ளது.
iii. அரசு பற்றிய நவ தாராளவாத கோட்பாடு சமகால உலகில் கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது.

## 2.2 அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு

**நோக்கம்**

அரசியல் விஞ்ஞானத்தில் அரசு பற்றிய முக்கிய நோக்குகளில் ஒன்றான அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாடு பற்றி பரீட்சார்த்திகளிடையே காணப்படுகின்ற அறிவையும் புரிதலையும் மதிப்பீடு செய்ய இந்த தலைப்பு முயற்சிக்கிறது.

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாட்டிற்கு மாற்றீடாகவும் சமவுடைமை அரச மாதிரி மார்க்சிச கோட்பாட்டினை அடிப்படையாகவும் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிமுகப் பகுதியில் குறிப்பிட முடியும்.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ் மற்றும் வி. ஐ. லெனின் ஆகியோரின் எழுத்துக்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. இது 19 ஆம் நூற்றாண்டில் அரசு பற்றியஆதிக்க முள்ள அணுகுமுறையாக இருந்த அரசின் தாராளவாத கோட்பாட்டினை விமர்சனம் செய்வதுடன் தொடங் கியது.

- அரசு பற்றிய மார்க்சிய கோட்பாட்டை வழிநடத்தும் ஆய்வுமுறை அடிப்படையிலான அணுகுமுறை வரலா ற்று பொருள்முதல்வாதம் ஆகும். இந்த அணுகுமுறை அரசானது எந்தவொரு சமூகத்திலும் சமூகத்தின் பொருள் சார்ந்த அடித்தளங்களில் காணப்படுகின்றது என வாதிட்டது. பொருள் சார்ந்த அடித்தளங்கள் என்பது அந்த சமூகத்தில் காணப்படும் சொத்து மற்றும் செல்வத்தின் உரிமையை அடிப்படையாகக் கொ ண்ட சமூக வகுப்புகள் மற்றும் பொருளாதார உறவுகள் ஆகும். அரசு சமூகத்திலும் மேலான மற்றும் அது ஒரு கட்புலனாகாத வரலாற்று சக்தி என்ற ஹெகலின் கருத்துக்களை மார்க்சிசம் நிராகரித்தது. மார்க்சிச கோட்பாடு அரசு சமூகத்திலிருந்து தோன்றியது என்றும் அது அடிப்படையில் ஒரு சமூக நிறுவனம் என்றும் மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் போன்றோர் வலியுறுத்தினர்.

- மார்க்சிச கோட்பாட்டின் மற்றொரு முக்கியமான அனுமானம் அரசு வரலாற்றின் மூலம் உருவாகியுள்ளது என்பதாகும். எனவே, அதன் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியில் அரசு அந்த வரலாற்றுக் காலம் மற்றும் சூழலுக்கான குறிப்பிட்ட பண்புகளை எடுத்துள்ளது. அரசின் இத்தகைய வரலாற்று வடிவங்களில் சில அடிமை, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவம் போன்ற இயல்புகளைப் பெற்றுக்கொண்டது. அரசு இல்லாமல் போகும் வரலாற்றுக் காலம் ஒன்று உருவாகும் என மார்க்ஸீசக்கோட்பாடு குறிப்பிட்டது.

- அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசு வரலாற்று ரீதியாக தோற்றம் பெறாத ஒரு கால கட்டத்தைப் பற்றி யும் குறிப்பிடுகின்றது. இந்த அரசுக்கு முன்னரான மனித சமூகம் ஆதிகால கம்யூனிச சமூகமாக இருந்தது. மார்க்சிச கோட்பாட்டின் படி, ஆதிகால கம்யூனிச சமுதாயத்தில் எந்த அரசும் இல்லாததற்குக் காரணம் இங்கு தனியார் சொத்துகள் அல்லது தனியார் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சமூக வகுப்புகள் காணப்படாமையாகும்.

- இவ்வாறு மனித சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு சமூக வகுப்பு- கள் அபிவிருத்தியடைந்த போது அதன் பெறுபேறாக சமூகங்கள் எதிர் வர்க்கங்களாக பிரிவடைந்ததன் விளைவாகவே அரசு முதன் முதலில் தோற்றம் பெற்றது என்கிறது. இதன்படி அரசு வர்க்க பேதத்தின் விளைவாகும். அது பொருளாதார சக்தி கொண்ட ஆதிக்க வகுப்பின் கருவி ஒன்றாக இருந்தது என மார்க் சிசக் கோட்பாடு குறிப்பிடுகின்றது.

- இவ்வாறு அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசின் 'வர்க்க வேறுபாடு' ஒன்றை அல்லது அரசின் 'வர்க்கக் கோட்பாடு' ஒன்றை வழங்கியுள்ளது. அதன்படி, அரசு அனைவருக்கும் உரித்தான ஒன்று அல்ல. இது பொருளாதார ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்திற்கு சொந்தமானது. இது அடிமை முறை சமூகத்தில் ஆண்டான்களினதும், மானிய முறை சமூகத்தில் பிரபுக்களினதும் முதலாளித்துவ சமூகத்தில் செல்வந்தர் களினதும் கருவியாகும் என மாக்சிச கோட்பாடு குறிப்பிடுகின்றது.

- இந்த விடயத்திலிருந்து அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாட்டின் மற்றொரு அம்சம் வெளிப்படுகிறது. அதாவது அரசு அடிப்படையில் வன்முறை மற்றும் அடக்குமுறையுடைய நிறுவனம் ஆகும். அதன்படி, தொழிலாள வர்க்கத்தையும் ஏழைகளையும் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை நிலைமைகளின் கீழ் வைத்திருப்பதற்காக ஆளும் வர்க்கத்தின் முக்கிய கருவியாக அரசு காணப்படுகின்றது.

- சமூகத்தை எதிர் வர்க்கங்களாக வேறுபடுத்துவதன் பிரதிபலிப்பாக அரசு உருவானது என்ற வாதம் வர்க்கங்கள் இல்லாதபோது எந்த அரசும் காணப்படாது என்ற மனித வரலாற்றின் எதிர்கால வரலாற்று படி-நிலையை குறிப்பிடுகின்றது. கம்யூனிச சமூகம் என்பது வர்க்கங்கள் இல்லாமையால் அரசற்ற நிலையில் இருக்கும் சமூகம் என மார்க்சிசம் எதிர்வு கூறியது. வர்க்கங்கள் அற்ற கம்யூனிச சமூகத்தை நோக்கி காலடி யெடுத்து வைக்கும்போது "அரசு உதிர்ந்து மறைந்து விடும்" என்பது மார்க்சிசம் இது தொடர்பில் குறிப்பிட் டுள்ள விடயமாகும்.

- அரசு உதிர்ந்து மறைந்துவிடும் என்ற இந்த கோட்பாடு பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. விமர்சகர்கள் இது ஒரு கற்பனாவாத சிந்தனையே தவிர வரலாற்று யதார்த்தம் அல்ல என்று குறிப்பிடுகின்றார்கள்.

- தாராளவாத அரசியல் கோட்பாடும் மார்க்சிச கோட்பாட்டின் அரசு பற்றிய வர்க்க அணுகுமுறையை விமர் சிக்கிறது. அரசு ஒரு வர்க்கத்தின் கருவி என்று கூறுவது அனுபவபூர்வமாக தவறானது என்பதாகும். தாராளவாத அரசின் இந்த விமர்சனத்துடன் முன்வைக்கப்படுகின்ற கோட்பாடு "பன்மைத்துவவாத கோட்பாடு" என அழைக்கப்படுகின்றது. இதன்படி அரசு என்பது ஒரு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்படும் அரசியல் நிறுவனம் அல்ல. அது பல்வேறு சமூகக் குழுக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிலாசைகளுக்கு பிரதிபலிப்பினைக் காட்டும் ஒன்றாகும்.

முடிவுரை **(03 புள்ளிகள்)**

அரசியல் கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு இன்னும் அரசின் தன்மை மற்றும் பணிகள் பற்றிய பலமான பகுப்பாய்வை வழங்குகிறது என்று குறிப்பிட்டு விடையை முடிக்க முடியும். மார்க்சிச கோட்பாட்டின் முக்கியமானதொரு பலம் அது பொருளாதார, சமூக மற்றும் அர சியல் அதிகாரத்தின் சமமற்ற பங்கீட்டை பிரதிபலிக்கின்ற அரசை முதன்மையானதொரு சமூக அதிகார நிறுவனமாக கருதுவதாகும்.

**வினா இலக்கம் 03 :**

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.**

i. **அரசு மற்றும் ஏனைய சங்கங்கள்**

ii. **அரசு மற்றும் அரசாங்கம்**

iii. **அரசு மற்றும் தேசம்**

iv. **அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

**(10 x 2 = 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

நடைமுறை அரசறிவியல் கோட்பாடு, விவரிப்பு, பிரயோக அரசியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு தலைப்புகள் தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவு மற்றும் விவரணத் திறன்களை மதிப்பிட முற்படுகின்றது. பரீட்சார்த்திகள் இரண்டு தலைப்புகளை மாத்திரமே தெரிவு செய்ய வேண்டும்.

i. **அரசு மற்றும் ஏனைய சங்கங்கள் (10 புள்ளிகள்)**

அரசினை ஏனைய சங்கங்களில் இருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்ளவும், அரசு அனைத்துவித சங்கங்களில் இருந்தும் விசேடத்துவமான சங்கமாக இருப்பது ஏன்? என்பதை தெளிவுபடுத்துவதற்குள்ள விடய அறிவு மற்றும் இயலுமைகளை பரிசோதிப்பதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**விடய உள்ளடக்கம்**

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

அரசு என்பது ஓர் மானிட சங்கமாகும். இதனை நியாயப்படுத்துவதற்கு அரிஸ்டோட்டிலின் கூற்றாகிய 'அரசு என்பது மானிட சமூகம் என்பதனை குறிப்பிட முடியும். ஆயினும், அது ஏனைய சங்கங்களில் இருந்து வேறுபட்டது' என்பதனை அடிப் படையாகக் கொண்டு விடையை ஆரம்பிக்கலாம். மானிட சங்கமென்ற வகையில் தமக்கேயுரிய உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவர்களை "பிரஜைகள்" என குறிப்பிடலாம். இவ்வாறான சுருக்கமான கலந்துரையாடலின் மூலம் அறிமுகத்தை முன்வைக்கலாம்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- அரசு ஓர் மானிட சங்கமாக இருந்தாலும் கூட அது ஏனைய சங்கங்களில் இருந்து வேறுபட்டது.
- அரசினை சமூக சங்கங்களில் இருந்து வேறுபடுத்தும் விதத்தினை இவ்விடயங்களின் மூலம் தெளிவுப்படுத்த வேண்டும்.

**ஏனைய சங்கங்கள்**

I. அங்கத்துவம் என்பது விருப்பத்திற்குரிய தெரிவாகும்.

II. அவற்றின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

III. அவை தமது விருப்பங்களை பலவந்தமாக அங்கத்தவர்கள் மீது திணிக்க முடியாது. எனினும் அரசினால் அவ்வாறு செய்ய முடியும்.

IV. அவை பொதுவாகவே குறுகிய / மட்டுப்படுத்தப்பட்ட ஆயுட்காலத்தை கொண்டவை.

V. அவை சமூகத்தில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட சாராரின் நலன்களை, தேவைகளை திருப்திப்படுத்துவதாக அல்லது நிறைவேற்றுவதாக காணப்படும்.

VI. அவை அரசின் அள்புலத்தை கடந்து செயற்படும்

**அரசு**

I. அங்கத்துவம் கட்டாயமானது. அரசு ஒன்றின் கீழ் தன்னார்வ அடிப்படையில் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளும் சந்தரப்பங்கள் மிக குறைவாகும் – அரசின் அங்கத்தவராக இல்லாமல் சமூகத்தில் நிலைத்திருக்க முடியாது.

II. அரசின் அங்கத்துவம் 'பிரஜாவுரிமை' என அழைக்கப்படுகின்றது. அது பிரஜைகளுக்கு சில உரிமை–களையும் சலுகைகளையும் கடமைகளையும் வழங்குகின்றது. இவை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கும்.

III. அரசு இறைமை அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அரசு அதனை சகல உறுப்பினர்கள் மீதும் பிரயோகிப்ப–துடன் இறைமை அதிகாரத்தை பிரதிபலிக்கும் நிறுவனமாகவும் காணப்படுகின்றது.

IV. அரசு குறிப்பிட்ட ஆள்புலத்திற்குள் தொழிற்படும்.

V. அரசு தனது விருப்பத்தினை ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் திணிப்பதற்கான அதிகாரத்தையும் வழிமுறை களையும் கொண்டுள்ளது.

VI. தமது அங்கத்தவர்களைப் போன்றே சமூகத்தில் காணப்படும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பில் கட்டுப்ப டுத்தும் அதிகாரமும் அதற்கான தனியுரிமை அதிகாரமும் தன்னிடம் உள்ளதாக குறிப்பிடுகின்றது.

VII. அரசின் அதிகாரங்கள் மற்றும் அதிகாரத்துவம் ஆகியன சமூகத்தில் காணப்படும் ஏனைய சங்கங்களை விட மேலோங்கியதாகும். இந்நிறுவனம் தமது அதிகார பலத்திற்கு கட்டுப்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கி–ன்றது.

- அரிஸ்டோட்டில் குறிப்பிட்டது போன்று ஏனைய சங்கங்களானது குறிப்பிட்ட சிலரின் நலனுடன் மாத்திரமே கரிசனை கொண்டது. ஆனால் அரசு என்பது பெரும் எண்ணிக்கையிலான அரசியல் சமூகமொன்றின் ஒட்டுமொத்த நலன் தொடர்பாக கரிசனை கொண்டது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

பிரதான கலந்துரையாடலின் சுருக்கத்தை வழங்குவதுடன், அரசு மனித சங்கமொன்றாக இருப்பினும் அதற்கு விசேட பண்புகள் காணப்படுகின்றன என்பதையும், அதனால் அது ஏனைய சங்கங்களில் இருந்து வேறுபடுகின்றது என்பதையும் குறிப்பட்டு விடையினை நிறைவு செய்ய முடியும்.

## ii. அரசு மற்றும் அரசாங்கம் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

அரசியல் கோட்பாடுகளில் அரசு மற்றம் அரசாங்கம் ஆகியவற்றை வேறுபடுத்தியறிதல். மற்றும் தெளிவுப டுத்தல் என்பன தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவினை பரிசீலனைச் செய்வதே இத்தலைப்பின் நோக்கமாகும். அரசு மற்றும் அரசாங்கம் தொடர்பான தனித்தனியான விடயங்களை மாத்–திரம் முன்வைப்பது இவ்வினாவிற்கு முழுமையாகாது. இவற்றுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்புகளைக் கலந்துரையாடுவதும் அவசியமாகும்.

**உள்ளடக்கம்**

விடை கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

அரசு மற்றும் அரசாங்கம் ஆகியன அரசியல் விஞ்ஞான பகுப்பாய்விலும் நடைமுறை அரசியல் வாழ்விலும் முக்கியமான எண்ணக்கருக்களாகக் காணப்படுகின்றன. இது அரசியல் வாழ்வின் அடிப்படை நிறுவனங்கள் என்பதை முன்வைத்து அறிமுகம் செய்தல மற்றும் இவ்விரு எண்ணக்கருக்களினதும் வரைவிலக்கணங்களை முன்வைத்தலை எதிர்ப்பார்க்கின்றது.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- அரசு மற்றும் அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படும் அதேவேளை அவற்றுக்கிடையில் அந்நியோன்ய தொடர்பு மற்றும் இருப்பு (நிலைப்பு) காணப்படுகின்றது என்பதனை வெளிப்படுத்தல் அவசியமாகும். இதன்போது கீழ்வரும் விடயங்களை தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

- அரசு என்பது சமூகத்தின் மேலான அரசியல் நிறுவனமாக காணப்படுவதுடன் இறைமை அதிகாரத்தையும் அரசியல் சமூகமொன்றின் சுதந்திரத்தையும் கொண்ட நிறுவனமாகும்.

- அரசு ஒப்பீட்டளவில் நீண்ட இருப்பினைக் கொண்டுள்ளதோடு தனது ஆள்புலத்திற்குள் வாழும் ஒவ்வொரு நபரிடம் இருந்தும் அடிபணிவினை எதிர்பார்க்கும் அரசியல் நிறுவனமாகும்.

- அரசாங்கம் என்பது அரசின் ஒரேயொரு மூலக்கூறு மாத்திரமேயாகும்.

- அரசாங்கம் அரசின் முகவராகும். அது அரசின் விருப்பத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நிறுவனங்களையும் ஆளணியினரையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

- அரசு சமூகத்தில் காணப்படும் அரசியல் நிறுவனங்களில் மேலான நிறுவனமாக காணப்பட்டாலும் அது பார்க்கக்கூடிய தொட்டுணரக்கூடிய ஒன்றல்ல. அது கட்புலனாகாத எண்ணக்கருவாகும். மறுபுறமாக அரசாங்கம் என்பது கண்ணால் பார்க்கக்கூடிய நிறுவனமாகும்.

- அரசு மற்றும் அரசாங்கம் ஆகியன ஒரே நிறுவனங்கள் அல்ல. அவை இரண்டும் வேறுப்பட்ட நிறுவனங்களாகும். தாராள ஜனநாயக அரசியலில் இதனை நன்றாக காண முடிகின்றது. ஜனநாயகம் தோற்றம் பெறுவதற்கு முன்னர், அரசும் அரசாங்கமும் ஒன்றெனக் கருதப்பட்டது. அரசும் நானே நானே அரசு என பிரான்ஸ் நாட்டின் 14ஆம் லூயி மன்னன் குறிப்பிட்டமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

- அரசாங்கங்கள் ஒரு குறிப்பிட்ட பதவிகாலத்திற்காக தெரிவு செய்யப்படுகின்றன என்பது நவீன ஜனநாயகங்களில் தெளிவாகக் காண முடிகின்றது. இது மக்களால் தெரிவு செய்யப்படவும் நீக்கப்படவும் முடியும். இது அமைதியான வழியிலும் சில சமயங்களில் புரட்சி மூலமும் இடம்பெறும். ஆனால், அரசினை அகற்றுவதற்கு புரட்சி அவசியமானதாகும். அது பெரும்பாலும் வன்முறையுடன் தொடர்புபட்டதாகும்.

**முடிவுரை (02 புள்ளிகள்)**

அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் காணப்படுகின்ற போதும் அவை வேறு வேறாக பிரிந்திருக்க முடியாது. அரசின்றி அரசாங்கமோ அரசாங்கமின்றி அரசோ நிலைத்திருக்க முடியாது. பிரசைகள் அரசுடன் தொடர்புகளைப் பேணியபோதும் அரசு பிரசைகளுடன் அரசாங்கத்தினை பயன்படுத்–தியே தொடர்பு கொள்கின்றது.

## iii. அரசு மற்றும் தேசம் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இத்தலைப்பானது அரசு மற்றும் தேசம் ஆகிய இரு எண்ணக்கருக்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவினையும் புரிந்துணர்வினையும், அவற்றுக்கிடையிலான பரஸ்பர தொடர்பினையும் மதிப்பிட முற்படுகின்றது.

**உள்ளடக்கம்**

இவ்விடையில் பின்வரும் விடயங்கள் தெளிவுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**அறிமுகம்** (02 புள்ளிகள்)

அரசு மற்றும் தேசம் ஆகியன அரசியல் கோட்பாடு மற்றும் நடைமுறை சமூக வாழ்க்கையில் இரு முக்கியமான எண்ணக்கருக்களாக காணப்படுகின்றன. இவை இரண்டும் தொடர்பான சரியான புரிந்துணர்வு உலக அரசியலையும் இலங்கையின் தற்கால அரசியலையும் விளங்கிக் கொள்வதற்கு அவசியமாகும் என்ற விடயத்தினை அறிமுகத்தில் குறிப்பிட முடியும். இங்கு இவையிரண்டுக்குமான வரைவிலக்கணங்களை முன்வைத்தல் அவசியமாகும்.

**கலந்துரையாடல்** (06 புள்ளிகள்)

- சாதாரண கலந்துரையாடலின் போது அரசு மற்றும் தேசம் என்பன ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை உதாரணத்துடன் சுட்டிக்காட்டல். நவீன "தேசம் – அரசு" எனும் எண்ணக்கருக்களில் அவை வெளிப்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டுதல். நவீன தேசிய – அரசின் ஆரம்பம் மற்றும் அரசின் அடையாளம் மற்றும் தேசத்தின் அடையாளம் என்பவற்றை ஒன்றாக கருதிய மரபுகள் பற்றி இதன்போது குறிப்பிட வேண்டும்.

- எவ்வாறானபோதும் அரசு மற்றும் தேசம் ஆகிய இரண்டுக்குமிடையில் தற்போது சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதன்போது அரசுக்குள் இனக்குழுக்கள் புதிய இனத்துவ அடையாளங்கள் மற்றும் துன்ப துயரங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் உரிமைகளை கேட்பதனால் இவ்வாறான சிக்கல்கள் தோன்றியுள்ளன.

- இதனால் ஒரு தேசிய அரசுக்குள் வாழுகின்ற பிரசைகள் "மொழி, கலாசாரம், மதம் போன்றவற்றால் ஒன்றிணைந்த ஒரே இனம்" எனும் மூலக்கொள்கை பிரச்சினைக்குள்ளாகியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். தனி அரசொன்றினுள் வாழும் பல்வேறு மொழி, மதம் மற்றும் கலாசார அடையாளங்களைக் கொண்ட "உப தேசிய" குழுக்கள் சிலவும் "தேசம்" என்பதில் இருக்கமுடியும் என்பது அரசியல் கோட்பாட்டில் "தேசம்" எனும் எண்ணக்கருவின் தற்போதைய கருத்தாக உள்ளது. இவ்வாறான அரசியல் கோட்பாடு "பல்லின" அல்லது பல் தேசிய அரசு" எனும் எண்ணக்கருவினால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

- இதனை விபரிப்பதற்குத் தேவையான உதாரணங்களை இலங்கை இந்தியா மற்றும் ஏனைய நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**முடிவுரை** (02 புள்ளிகள்)

முடிவுரையானது தேசம் மற்றும் அரசு அதேவேளை தேசிய அரசு ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டு வந்த விளக்கங்களானது இன்று மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது என்பதனையும், அரசு மற்றும் தேசத்–திற் கிடையிலான தொடர்புகள் பற்றி அரசியல் கோட்பாடுகளில் காணப்பட்ட மரபார்ந்த விளக்கம் இன்று மாற்றத்திற்குள்ளாகியுள்ளது என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

## iv. அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

நவீன ஜனநாயக அரசியல் கோட்பாடுகளில் அரசாங்கம் பிரசைகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பினை நிறைவேற்றல் தொடர்பான மூலக்கொள்கையினை எண்ணக்கருவாக்கப்பட்டுள்ள விதம் மற்றும் அதனை அடைந்து கொள்வதற்குள்ள ஊடகங்கள் தொடர்பில் மாணவர்களிடம் காணப்படும் அறிவினை பரிசோதிப்பதே நோக்கமாகும்.

**உள்ளடக்கம்**

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

அரசாங்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவது நவீன ஜனநாயக ஆட்சி முறையின் ஒரு முக்கியமான பண்பாக காணப்படுகின்றது என்பதனை குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்க முடியும்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- நவீன ஜனநாயக அரசியலமைப்புவாதத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்தினை கட்டுப்படுத்துதல் அதிகாரப்பிரிவினை கோட்பாட்டுடன் மற்றும் தடைகள் – சமன்பாடுகள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டதாகும். அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதன் நோக்கம் பிரசைகளின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காகும் என்பதை சுட்டிக்காட்டி, இது நவீன ஜனநாயக அரசியலமைப்பு வாதத்தின் அரசியல் பயன்பாட்டில் முக்கியமானதொரு மூலக்கொள்கையாகும் என்பதை சுட்டிக்காட்டல்.

- "அரசாங்க அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தல்" அதிகார வேறாக்க எண்ணக்கருவுடன் தொடர்புபட்டுள்ள விதம், அது அமெரிக்காவில் முதன்முதலில் வெளிப்படுத்தப்பட்டமையை இதனைத் தொடர்ந்து குறிப்பிட முடியும்.

- அதிகாரம் குவிக்கப்படுவதன் விளைவாக மக்களை துன்பத்திற்குள்ளாக்கும் எதேட்சையான ஆட்சிமுறை தோற்றம் பெறுவதும், அதன்மூலம் பிரஜைகளின் உரிமைகள் மீறப்படும் விதம் குறித்தும் தெளிவுபடுத்தியிருத்தல்.

- அரசாங்கத்தின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை இனங்கண்டு விவரித்தல் வேண்டும்.
  - (i) கோட்பாட்டுத் தத்துவங்கள்
    அவை அரசியலமைப்புவாதம் மற்றும் அரசியல் அமைப்புக்களில் உள்வாங்கப்படுவனவாகும்.
  - (ii) நடைமுறைசார்ந்த வழிமுறைகள்
    நடைமுறை அரசியலில் அரசாங்க அதிகாரங்களை கட்டுப்படுத்தும் பொறிமுறைகள்

- கோட்பாட்டுத் தத்துவ மூலங்கள்
  அரசாங்க அதிகாரம் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திடம் குவிந்திருக்காவண்ணம் அரச அதிகாரத்தினை நிறுவன ரீதியாக பிரித்து அதன்மூலம் சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சுயாதீன நீதித்துறை,நிர்வாகம் சட்ட சபைக்கு பொறுப்பு கூறுதல், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் என்பவற்றினை உறுதி செய்ய வழி வகுக்கின்றது.

- நடைமுறைசார்ந்த வழிமுறைகள்
  சிவில் சமூக இயக்கங்கள், பொதுசன அபிப்பிராயம், ஊடக சுதந்திரம், சுயாதீன ஆணைக்குழுக்கள் துடிப்பான பிரஜைகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

அரசியல் அமைப்பு சார்ந்த மற்றும் நடைமுறை சார்ந்த வழிமுறைகள் ஊடாக அரசாங்கத்தின் அதி-கா ரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆரோக்கியமான ஜனநாயகத்தை மற்றும் பிரஜைகளின் உரிமை-களையும் சுதந்திரத்தினையும் உறுதிப்படுத்த பெரிதும் அவசியமாகும் என முடிவுரையினை வழங்க முடியும். இதன்போது பிரஜைகளின் கடமைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

**4. பின்வருவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க:**

(i). **கபினற் அரசாங்க முறையின் பண்புகள்**
(ii). **ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் பண்புகள்**
(iii). **கலப்பு அரசாங்க முறையொன்றில் நிர்வாகத்துறை**
(iv). **ஒற்றையாட்சி அரசாங்க முறையின் பண்புகள்**

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இவ்வினாவின் நோக்கம் உலகத்தில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு மாதிரிகள் (கட்டமைப்பு) தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினை பரிசோதிப்பதாகும். இதன்கீழ் வினா நான்கு பகுதி-களை உள்ளடக்கி யுள்ளது. அதில் விரும்பிய இரு பகுதிகளைத் தெரிவு செய்து விடையளிக்க எதிர்பார்க்கப் படுகின்றது.

(i) **கபினற் அரசாங்கமுறையின் பண்புகள்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

இப்பகுதியின் மூலம் ஏனைய அரசாங்கமுறைகளிலிருந்து கபினற் அரசாங்கமுறையினை வேறுபடுத்தி விளங்கிக் கொள்வதற்கு பரீட்சார்த்திகளுக்குள்ள திறனை அளவிடுவதாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

கபினற் அரசாங்கமுறை மாதிரியில் நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் விதத்திற்கேற்ப அரசாங்கமுறையினை வகைப்படுத்த பயன்படுத்தும் ஒரு முறையாகும் என்பதை தெளிவுபடுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- இவ்வரசாங்க முறையின் விசேட பண்பு சட்டத்துறையில் இருந்து நிறைவேற்றுத்துறை தோற்றம் பெறுவதாகும்.
- நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறுதல்
- அதனால் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைகளுக்கிடையில் நெருக்கமான தொடர்பொன்று அல்லது இணைப்பொன்றினைக் காணமுடியும்.
- கபினற் அரசாங்க முறையின் விசேட பண்பொன்றாக அமைவது நாம நிருவாகம் மற்றும் உண்மை நிருவாகம் என இரு நிருவாகங்கள் காணப்படல்.
- உண்மை நிருவாகம் அல்லது அமைச்சரவை பதவி விலகும்போது சட்டத்துறையும் பதவி விலகும், அதேபோல் சட்டத்துறை கலையும் போது நிறைவேற்றுத்துறையும் பதவி விலகும்.

நிறைவேற்றுத்துறையினை அதிகாரத்தில் இருந்து நீக்குவதற்கு சட்டத்துறைக்குள்ள இயலுமை. அவ்வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பங்களாவன.

i நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றுதல்.

ii அரசாங்க கொள்கை விளக்கவுரை தோல்வியடைதல்.

iii வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்படல்

iv அரசாங்கத்தின் முக்கிய சட்டங்களை சட்டத்துறை தோல்வியடையச் செய்தல்.

- கபினற் அரசாங்கமுறை வெற்றியளிப்பதற்கு இரு கட்சி முறை அவசியம்.
- ஒரே தேர்தலில் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் விதி தீர்மானிக்கப்படல்.
- ஜனாதிபதி அரசாங்கமுறைப் பண்புகளுடன் ஒப்பிடும்போது அதிகார வேறாக்கக் கோட்பாட்டினைப் பின்பற்றாமை.
- இதன் வெற்றிக்கு கூட்டுப்பொறுப்பு, பலமான எதிர்கட்சி அவசியம்

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலை சாரம்சப்படுத்தி இது ஜனநாயக ஆட்சிமுறைக்கு பொருத்தமான ஆட்சி முறையாக இருப்பினும், ஒப்பீட்டு ரீதியில் ஸ்திரமற்ற ஆட்சிமுறையாக மாற முடியும் என்பதை சுட்டிக்காட்டி விடையினை நிறைவு செய்யலாம்.

## (ii) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் பண்புகள் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இப்பகுதியின் நோக்கம் ஜனாதிபதித்துவ அரசாங்கமுறையில் அரசின் நிறைவேற்று அதிகாரத்தினை ஒழுங்கமைக்கும் ஒரு விசேட அரசாங்க மாதிரி என்பதை தெளிவுபடுத்த பரீட்சார்த்திகளுக்குள்ள இயலுமையை அளவிடுவதாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

ஜனாதிபதி அரசியலமைப்பானது சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு சமநிலைத் தலையீடுகள் மூலக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் அரசுகளில் நிறைவேற்றுத்துறையினை ஒழுங்கமைப்பதற்காக பயன்படுத்தும் அரசியலமைப்பாக தெளிவுபடுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதில்லை – இரண்டும் தனித்தனி தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படும் என்பதை தெளிவுபடுத்தல்.
- சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத் துறையின் பதவிக்காலம் சமமற்றது.

- கட்சி அரசியல் காரணங்களுக்காக நிறைவேற்றுத்துறையினை சட்டத்துறையால் பதவி விலக்க முடியாமை. குற்றப் பிரேரணை மூலம் குறித்த சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப மட்டுமே பதவி நீக்க முடிதல்.

- அதிகார வேறாக்க எண்ணக்கரு மற்றும் சமநிலைத் தலையீடுகள் முறைமை உள்ளடங்கியிருத்தல்.

- ஒப்பீட்டு ரீதியில் நிலையானதும் வினைத்திறன் மிக்கதுமான அரசியலமைப்பாக இருத்தல்.
- சட்டத்துறை கலைக்கப்பட்டிருப்பினும் நிறைவேற்றுத்துறை செயற்படல்.
- சட்டத்துறையில் இருந்து விடுபட்ட தனியான நிறைவேற்றுத்துறை

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

விடையின் உள்ளடக்கத்தினை சாரம்சப்படுத்தி ஒப்பீட்டு ரீதியாக ஸ்திரமான அரசியலமைப்பாக இருப்பினும் ஜனாதிபதி அரசியலமைப்பு ஜனநாயக வாழ்க்கைப் பண்பில் குறைந்த அரசியலமைப்பு என்பதை தெளிவுபடுத்தியிருத்தல்.

**(iii) கலப்பு அரசாங்க முறையொன்றில் நிர்வாகத்துறை** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

கலப்பு அரசியலமைப்பு என்பது இரு முகங்களைக் கொண்ட அரசியலமைப்பு என அறிமுகப்படுத்தப்படும் அரசியலமைப்பாகும். இம்முறையின் விசேட பண்பு கபினற் மற்றும் ஜனாதிபதி அரசியலமைப்புகளின் பண்புகளை இணைத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையும் செயற்படுவதற்குமான வாய்ப்பினை வழங்குவதாகும். இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்குள்ள இயலுமையை அளவிட்டு பார்ப்பதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்தி இவ்வரசியலமைப்பினை ஜனாதிபதி அரசியலமைப்பில் காணப்படும் சில பண்புகளையும் கபினற் அரசியலமைப்பில் காணப்படும் சில பண்புகளையும் கலந்து அரசின் நிறைவேற்றுத்துறையினை உருவாக்க பின்பற்றியுள்ள மாதிரியாகும் என்பதை அறிமுகப்படுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும்

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- கலப்பு அரசியலமைப்பில் தனித் தனித் தேர்தல்களில் ஜனாதிபதியும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையும் செயற்படல்.

- ஜனாதிபதியினை கட்சி அரசியல் காரணமாக பதவி விலக்க முடியாவிட்டாலும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் ஆயுட்காலம் சட்டத்துறையின் தீர்மானத்தில் தங்கியுள்ளமை.

- தேசிய ரீதியில் முக்கியத்துவமிக்க அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் அரசியலமைப்பினூடாகவே ஜனாதிபதியின் அதிகாரத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமை.

- பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை சட்டத்துறைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியதோடு ஜனாதிபதி அவ்வாறான பொறுப்புடையவரல்லர்.

- இவ்வாறான நிறைவேற்றுத் துறை வெற்றி பெறுவதற்கு சட்டத்துறையின் பெரும்பான்மை பெற்றக் குழுவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஒத்துழைப்புசார் நடத்தையொன்று அவசியமாகும். ஜனாதிபதி ஒரு கட்சியிலும் சட்டத்துறையின் பெரும்பான்மை இன்னொரு அரசியல் கட்சியிடமும் காணப்படும் போதே இது விசேடமாக தேவைப்படுகின்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மேற்குறிப்பிட்ட உள்ளடக்கத்தை சாராம்சப்படுத்தி இவ்வரசியலமைப்பு வெற்றியளிப்பதற்கு சட்டத்துறை மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் ஒத்துழைப்புசார் நடத்தை ஒன்று காணப்படல் வேண்டும் என்பது பற்றி கவனம் செலுத்தியிருத்தல் வேண்டும்.

## (iv) ஒற்றையாட்சி அரசாங்கமுறையின் பண்புகள் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

ஒற்றையாட்சி அரசாங்க முறை அரச அதிகாரத்தை ஒழுங்கமைக்கும் விதத்திற்கு ஏற்ப அரசியல் அமைப்பினை வகைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் அரசியலமைப்பு வகை என்பதை தெளிவுபடுத்துவதற்கு பரீட்சார்த்தியின் திறனை அளவிடுவதே இப்பகுதியின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

ஒற்றையாட்சி அரசாங்க முறை என்பது அரச அதிகாரத்தினை ஒழுங்கமைக்கும் முறைக்கு ஏற்ப அரசியல் அமைப்பினை வகைப்படுத்தும் முறையின் கீழ் அரசினுள் செயற்படும் அனைத்து தரத்திலான அரசாங்கத்தைத் தாண்டி மத்திய அரசாங்கம் வலுவானதாகவும் பிரபல்யம் மிக்கதாகவும் செயற்படும் என்பதை தெளிவுபடுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- வலுவான மத்திய அரசியல் நிறுவனம் அல்லது மத்திய அரசாங்கம் காணப்படுதல். இங்கு மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாடு முழுவதும் வியாபித்து காணப்படும் (கட்டுப்பாட்டினை, கட்டளையினை பிரயோகிக்கும்).

- இங்கு மத்திய அரசாங்கம் நாட்டின் ஏனைய மட்ட அரசாங்க நிறுவனங்களை (மாகாண, பிரதேச, உள்ளூர்) மீறி செல்ல மற்றும் அவற்றின் தலைவிதியை தீர்மானிக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கும்.

- மத்திய அரசின் சட்டவாக்க அதிகாரத்திற்கு போட்டித்தன்மையான சட்டத்துறையொன்று காணப்படாமை.

- பொதுவாக சமஸ்டி முறையுடன் ஒப்பிடும்போது யாப்பு திருத்த முறைகள் இலகுவானதும் எளிமையானதுமாகக் காணப்படல்.

- ஒரு மத்திய அரசாங்கம் காணப்பட்டபோதும் நிருவாக செயற்திறனை ஏற்படுத்துவதற்காக பெரும்பாலான ஒற்றையாட்சி அரசுகள் நிருவாக அதிகாரங்களைப் பரவலாக்கியுள்ளமை.

- அரசின் எல்லையில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகாரத்துவத்தினை தெளிவாகவும் உண்மையாகவும் செயற்படுத்துவதற்கான இயலுமையின் காரணமாக ஒற்றையாட்சி அரசியலமைப் பினுள் அரசியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை சிறப்பாக நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புள்ளமை.

- ஒற்றையாட்சி அரசியலமைப்பினை ஒர் இனம் / ஒரு தேசியம் கொண்ட சமூகங்களிலேயே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

ஒப்பீட்டு ரீதியாக செயற்திறன் மிக்க அரசியலமைப்பாக கருதப்படினும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு பல்லின மற்றும் பன்மைத்துவ சமூகங்களில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை விடையில் உள்ளடக்கி உதாரணத்துடன் குறிப்பிட்டிருப்பின் சிறப்பான விடையாக ஏற்றுக்கொள்ள முடியும்.

**வினா இலக்கம் 05 :**

**பின்வருவனவற்றுள் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை ஆராய்க.**

(i) **இலங்கை தேசிய காங்கிரஸ் மற்றும் தேசிய இயக்கம்**
(ii) **இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**
(iii) **காலனித்துவ இலங்கையில் மதமறுமலர்ச்சி இயக்கம்**
(iv) **டொனமூர் சீர்த்திருத்தக் காலத்தில் சிறுபான்மையினரின் அரசியல்**

**(l0 × 2 = 20 புள்ளிகள்)**

(i) **இலங்கை தேசிய காங்கிரஸ் மற்றும் தேசிய இயக்கம்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

இவ்வினாவானது காலனித்துவக்காலத்தில் இலங்கையில் தோற்றம் பெற்ற அரசியல் நிறுவனமான தேசிய இயக்கம் மற்றும் தேசிய காங்கிரஸ் என்பன பற்றியும் அதன் வகிபங்கு தொடர்பாகவும் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினை மதிப்பிடுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விடையின் உள்ளடக்கம்**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்தி விடையினை பின்வருமாறு ஆரம்பிக்கலாம். தேசிய இயக்கம் என்றால் என்ன?, இலங்கை தேசியவாத இயக்கங்களின் தன்மைகள் பற்றிய சிறிய குறிப்பொன்றினை எழுதி விடையினை ஆரம்பிக்க முடியும். மேலும் இலங்கை தேசிய காங்கிரசின் பின்புலம் மற்றும் அதன் அரசியல் இயல்பு-களைச் சுருக்கமாக குறிப்பிட முடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றம்பெறும்போது சீர்திருத்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட சில அமைப்புகள் தோற்றம் பெற்றன. அந்தவகையில் இலங்கை சமூக மறுசீரமைப்பு லீக், இலங்கை மறு சீரமைப்பு லீக் மற்றும் இலங்கை தேசிய சங்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- தேசியகாங்கிரசின் ஆரம்பகால உருவாக்கத்தின் போது அதில் வேறுப்பட்ட இனக்குழுக்கள் இணைந்திருந்தன.

- தேசிய காங்கிரஸ் மிதவாத கோரிக்கைகளையே முன்வைத்தது. இலங்கையர்களை பிரித்தானிய முடியின் சம பிரஜைகளாக கவனித்தல் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்தது. இதனால் இதில் உயர் குழாமினரின் ஆதிக்கம் காணப்பட்டது.

- இலங்கையின் தேசிய காங்கிரஸ் சமூகத்தில் உயர் குழாமினர் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய-தாக இருந்தது. இதனால் இது அரசியல் ரீதியாக மிதவாதமாக இருந்தது. உதாரணமாக 1931 இலங்கைக்கு சர்வசன வாக்குரிமையினை வழங்கும்போது இதன் சில தலைவர்கள் அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்-தனர். பெண்களுக்கும் சாதாரண பொது மக்களுக்கும் வாக்குரிமையினைப் பெற்றுக்கொடுத்தால் நாட்டில் குழப்பநிலை ஒன்று ஏற்படும் என உயர்குழாம் தலைவர்கள் சிந்தித்தனர்.

- இலங்கை தேசிய காங்கிரசினால் வழிநடத்தப்பட்ட தேசியவாத இயக்கமானது இந்திய தேசிய காங்கிரசுடன் ஒப்பிடும் போது சார்பளவில் மிதவாதத்தன்மையை கொண்டதாகக் காணப்பட்டது.

- எவ்வாறாயினும் இலங்கை சுதந்திரமடையும் செயலொழுங்கில் இது பங்களிப்புச் செய்துள்ளது. அனைத்து இனக்குழுக்களுக்கும் உரிய உயர்குழாமினரின், அரசியல் சீர்த்திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடும் மேடையாக தேசிய காங்கிரஸ் இருந்தது.

- எவ்வாறாயினும் 1921ஆம் ஆண்டு மனிங் சீர்திருத்தத்தினால் அறிமுகப்படுத்திய இனவாரி பிரதிநிதித் துவ-த்தினால் சிங்கள, தமிழ், முஸ்லிம் உயர்குழாம் தலைவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமை சீர்குலைந்தது. தமிழ்த் தலைவர்கள் தேசிய சங்கத்தில் இருந்து வெளியேறி அகில இலங்கை தமிழ் காங்கிரசைத் தாபித்-தனர். இப்பிளவு இலங்கையின் அரசியல் உயர்குழாமினருக்கிடையில் இனத்துவ அரசியலின் ஆரம்ப-த்தைக் காட்டியது.

**சேவைகள்**

- இவ்வாறான வரையறைகள் காணப்பட்டபோதும் இலங்கையின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் அரசிய லில் முக்கியமான பங்களிப்பினை தேசிய காங்கிரஸால் செய்ய முடிந்தது. சீர்த்திருத்தங்களை வேண்டி நின்ற தேசிய உயர்குழாத்தினருக்கான முதலாவது அரசியல் மேடையினை தேசிய காங்கிரசே வழங்கியது.

- அத்தோடு மத்தியதர வர்க்கத்தின் அரசியல் தலைவர்களுக்கும், தமது கருத்துக்களை கலந்துரையாடு வதற்கும் இதன் மூலம் வாய்ப்புக் கிட்டியது. பின்னாளில் அவர்களில் துடிப்புமிக்க அரசியலுக்கான பயிற்சிப் பாடசாலையாகவும் இருந்தது.

- இலங்கையின் எதிர்கால அரசியல் தலைவர்களுக்கு பயிற்சி வழங்கியமையும் இதனால் மேற்கொள்ளப் பட்ட முக்கியமான சேவையாகும். அவர்களில் பெரும்பாலானோர் பின்னர் இலங்கையின் ஆதிக்க அரசி யல் உயர்குழாத்தினரின் உறுப்பினர்களாயினர்.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

இதன்போது மேற்குறிப்பிடப்பட்ட கலந்துரையாடலை பொழிப்பாக்கி, அதனை அடிப்படையாகக் கொண்டு அவதானிப்புகளை முன்வைக்க முடியும். இது நவீன இலங்கையின் அரசியல் மலர்ச்சியின் ஆரம்பம் என்பதோடு முக்கியமான அமைப்பாகவும் இருந்தது. அது அரசியல் கட்சிகளுக்கு அப்பால் பரந்த அரசியல் இயக்கமாகவும் இருந்தது. எனினும் அதனால் இலங்கையில் தோற்றம் பெற்ற இன ரீதியான பிளவுகளை வெற்றிகொள்ள முடியாமல் போனது.

## (ii) இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அவற்றின் பங்களிப்பு தொடர்பாக பரீட்சார்த்திகள் அறிவினை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும். இடதுசாரி இயக்கம் இலங்கை அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பிலும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் இலங்கையின் இடதுசாரி அரசியல் இயக்கத்தின் உருவாக்கம், காலனித்துவ மற்றும் காலனித்துவத்திற்குப் பின்னரான காலத்தில் அரசியலிலும் அதேவேளை தேசிய இயக்கத்திலும் அது ஏற்படுத்திய தாக்கத்தினை ஒரு சுருக்க அறிமுகமாக வழங்க முடியும். இடதுசாரிகள் வகுப்பு, தொழிற்சங்க அரசியல், காலனித்துவ எதிர்ப்பு அரசியல் மற்றும் பாராளுமன்றத்திலும் அதனைக் காணக்கிடைத்தது. இவ்வெல்லா தளங்களிலும் அதன் தாக்கம் பரந்ததாகும். இலங்கையின் இடதுசாரி இயக்கம் எப்போதுமே ஏழை மக்களினதும், சமூகத்தில் பின்னடைந்த மக்களினதும் துயரங்களை வெளிக்கொண்டு வருவதற்கு முன்நின்றதுடன், அரசாங்கம் ஏழை மக்களுக்கு சார்பான கொள்கைகளை உருவாக்க அழுத்தம் கொடுத்தது.

**கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு** **(06 புள்ளிகள்)**

- இடதுசாரி இயக்கமானது மேற்கத்தேயப் பல்கலைக்கழகங்களில் கல்விப்பயின்ற தீவிர இளைஞர்களினால் உருவாக்கப்பட்டது. அவர்களில் என், எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, S.A விக்ரமசிங்க போன்றோரின் பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிடல் வேண்டும். இவர்கள் காலனித்துவ எதிர்ப்புவாத உணர்வுகளைக் கொண்டிருந்த, அதனால் ஈர்க்கப்பட்ட இந்திய மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த இயக்கங்களின் ஈர்ப்பினைப் பெற்றிருந்தனர்.

- அவர்கள் மார்க்சிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இந்திய சுதந்திர போராட்டத்தினால் தூண்டப்பட்டவர்களாவர்.

- 1931ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை இயக்கத்திற்கு இவர்கள் பாரிய ஒத்துழைப்பினை வழங்கினர்.

- 1930களில் மேற்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு திரும்பியபின்னர் தொழிற்சங்க இயக்கம், காலனித்துவ எதிர்ப்பு தொழிலாளர் இயக்கங்களில் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர்.

- 1935ஆம் ஆண்டு டிசம்பர் தாபிக்கப்பட்ட லங்கா சமசமாஜ கட்சியானது இலங்கையின் அரசியலில் ஓர் மைல் கல்லாகும். இது இலங்கையின் முதலாவது நவீன அரசியல் கட்சியாகும். அதன் ஆரம்பகால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் புரட்சியினை விட அதிகளவில் சமூக ஜனநாயகம் சார்ந்ததாகவே காணப்பட்டது.

- லங்கா சமசமாஜ கட்சியானது 1936ஆம் ஆண்டு அரசாங்க சபைத் தேர்தலில் போட்டியிட்டு இரு ஆசனங்களைப் பெற்று N.M பெரேரா மற்றும் பிலீப் குணவர்த்தன போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அரசாங்க சபையினை அவர்கள் நாட்டின் சாதாரண மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான களமாக பயன்படுத்தினார்கள். அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை காலனித்துவ அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.

- லங்கா சமசமாஜ கட்சியில் ஏற்பட்ட பிளவினால் 1943ஆம் ஆண்டு கம்யூனிசக் கட்சி தாபிக்கப்பட்டது. இது இலங்கையின் இரண்டாவது இடதுசாரிக்கட்சியாகும்.

- சுதந்திரத்தின் பின்னர் இந்த இடதுசாரிக் கட்சிகள் பாராளுமன்ற கட்சிகளாக மாற்றம் பெற்றன. இலங்கை பாராளுமன்ற ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு இடதுசாரிக் கட்சிகள் பாரிய பங்களிப்பினை வழங்கின.

- 1947ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சிகள் இரண்டும், 18 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமை முக்கியமானதொன்றாகும்.

- இத்தேர்தலில் போட்டியிட்ட போதும் இடதுசாரிக் கட்சிகளுக்கு பெரும்பான்மையினைப் பெற முடியவில்லை. எனினும் இடதுசாரி கட்சிகள் பாராளுமன்றத்தில் வலுவான சக்தியாக செயற்பட்டுள்ளன.

- அதற்கு இடதுசாரி கட்சிகளுக்கிடையிலான கருத்தியல் வேறுபாடுகள் மற்றும் பிளவுகளினால் ஐக்கிய தேசிய கட்சிக்கான மாற்றீடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோற்றம் பெற்றமையை குறிப்பிட முடியும்.

- இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகளினால் இடதுசாரிக் கட்சிகள் மேலும் வீழ்ச்சியடைந்தன.

- இதனால் இளம் பிரிவினர் பாரம்பரிய இடதுசாரி இயக்கத்திலிருந்து வெளியேறி மக்கள் விடுதலை முன்னணியை உருவாக்கக் காரணமாகியது.

- இது புரட்சி தொடர்பான முயற்சிகள் இரண்டினை மேற்கொண்ட போதும் அது தோல்வியடைய பாராளுமன்ற அரசியலுக்குள் நுழைந்துகொண்டது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

முடிவுரையில் விடையின் சுருக்கம் மற்றும் இடதுசாரி இயக்கங்கள் வெற்றி கொண்ட விடயங்கள் பற்றிய மதிப்பீடு மற்றும் தடைகள் பற்றிய விமர்சனங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

## (iii) காலனித்துவ இலங்கையின் மதமறுமலர்ச்சி இயக்கம் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இத்தலைப்பானது காலனித்துவக் காலத்தில் எழுச்சிபெற்ற மத மறுமலர்ச்சி இயக்கங்களின் செயற்பாடுகளின் வகிபங்கு, பங்களிப்பு மற்றும் அவற்றின் தாக்கம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை மதிப்பிட முற்படுகின்றது. பரீட்சார்த்திகள் மத மறுமலர்ச்சி இயக்கம் என்பதை வரையறுத்து, அது காலனித்துவ மக்களின் அடையாளத்தைக் கட்டியெழுப்புவதில் வகித்த பங்கு குறித்து கருத்து தெரிவிக்க முடியும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான விடையினை சமய மறுமலர்ச்சி இயக்கங்களின் பின்னணி, அடையாள உருவாக்கத்தில் அதன் பொருத்தப்பாடு மற்றும் காலனித்துவ இலங்கை அரசியல் மீது அது ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான குறிப்புடன் ஆரம்பிக்கலாம்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி கற்ற பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுக்கு தனவந்த குடும்பங்களின் ஒத்துழைப்புகள் கிடைத்தன.
- இவை மேற்கத்தேய கலாசாரம் மற்றும் விழுமிய முறை என்பவற்றுக்கு எதிராக காணப்பட்டதுடன் சுதேசிய சமூகங்களின் கலாசார பெறுமானங்களையும் மரபுகளையும் உறுதிசெய்வதற்கான ஒரு முயற்சியாகவும் நோக்க முடியும்.
- இதனால் சகல மதமறுமலர்ச்சியினை இயக்கங்களும் கிறிஸ்தவத்திற்கு எதிரானதாகக் காணப்பட்டது.
- பௌத்த மறுமலர்ச்சி கிறிஸ்தவ மிசனரியின் விரிவாக்கத்திற்கு எதிரான பௌத்த கலாசார எதிர்வினையாக விளக்க முடியும்.
- ஆரம்பகால பௌத்த மறுமலர்ச்சி செயற்பாடுகளானது தென்மேற்கு கரையோரப்பிரதேசங்களைக் குவிமையப்படுத்தியதாக காணப்பட்டது. திறந்த விவாதங்கள் ஊடாக கிறிஸ்தவத்தினை சவாலுக்குட்படுத்தல், கிறிஸ்தவத்திற்கு மதம் மாற்றுவதனை எதிர்த்தல், பௌத்த கல்வியைப் பரப்புதல் மூலம் கிறிஸ்தவ ஆதிக்கத்திற்கு சவால் விடுத்தல். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் நிகழ்ச்சி நிரலாக இருந்தது.
- இவ்வியக்கங்களுக்கான ஒத்துழைப்புகள் பரம விஞ்ஞானார்த்த சங்கத்தினால் வழங்கப்பட்டது. இவ்வொத்துழைப்பு கிறிஸ்தவ மிசனரிமார்களுக்கு சவால்விடுகையில் பெரிதும் முக்கியம் பெற்றது.
- ஹிக்கடுவ சுமங்கள தேரர், மிகெட்டுவத்த குணானந்த தேரர், அணகாரிக்க தர்மபால ஆகியோரை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகளாக குறிப்பிட முடியும்.
- மத மற்றும் உலக கல்வியானது புதிய பாடசாலைகளை மையமாகக் கொண்டு பரவலடைந்தமை, பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முயற்சிக்கு நீண்டகால பெறுபேற்றினைப் பெற்றுக்கொடுத்த விடயமாகும்.

**இந்து மறுமலர்ச்சி**

- வட மாகாணத்தில் ஏற்பட்ட இந்து மறுமலர்ச்சியும் கிறிஸ்தவ மதத்தின் பரவலுக்கு எதிரான எதிர்வினையாக தெளிவுபடுத்த முடியும். ஆறுமுகநாவலர் இதன் முன்னோடியாகத் திகழ்ந்தார். அவர் தென்னிந்தியாவில் காணப்பட்ட இதே போன்ற இயக்கங்களால் ஈர்க்கப்பட்டார்.
- ஆறுமுகநாவலர் சைவ சமய புலமையாளராகவும் பைபிளை தமிழ் மொழியில் மொழி பெயர்த்தவர்களில் ஒருவருமாவார். அவர் சைவ சமய மரபுகளில் கல்வி பயின்றது மாத்திரமன்றி, கிறிஸ்தவ மிசனரி பாடசாலைகளில் வழங்கப்பட்ட நவீன கல்வி முறையிலும் பயின்றார். இவரின் பிரதான நோக்கம் சைவ மதக் கல்வியினை நவீன கல்வியுடன் பெற்றுக்கொடுப்பதாக இருந்தது.
- 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அவர் தலைமைத்துவம் வழங்கிய இயக்கம் கிறிஸ்தவ மற்றும் மேற்கத்தேய இயக்கங்களுக்கு காட்டிய சுதேசிய பிரதிபலிப்பாக இருந்தது.
- அவர் பாடசாலைகளை நிறுவி, நூல்களை எழுதி இந்து கலாசார பண்பாடுகளின் மறுமலர்ச்சியில் அவதானம் செலுத்தினார்.

- அந்தவகையில், இந்து மற்றும் பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கங்களுக்கிடையில் ஒருவகையில் ஒற்றுமை காணப்பட்டமையினை அவதானிக்க முடியும். கிறிஸ்தவர்களுக்கு பதிலளித்தல், சம்பிரதாய ஒழுக்க விழுமியங்களை மீள வெளிப்படுத்தல் மற்றும் நவீன பாடசாலைகளை உருவாக்குதல் போன்றன இதில் முக்கியம் பெற்றிருந்தன.

**இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்**

- 19ஆம் நூற்றாண்டின் சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சி இயக்கம் பௌத்த மற்றும் இந்து மறுமலர்ச்சி இயக்கங்களால் ஈர்க்கப்பட்ட ஒன்றாகும்.

- முஸ்லிம் தலைவர்கள் இந்து மற்றும் பௌத்த தலைவர்களிடம் கற்றுக்கொண்ட பாடம் யாதெனில் கிறிஸ்தவ ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலக் கல்வியின் ஏகபோக உரிமையினை உடைத்தெறிய முஸ்லிம் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகளை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

- M.C. சித்திலெப்பை மற்றும் ஒராபி பாஷா ஆகியோர் இதற்கான தலைமைத்துவத்தினை வழங்கினர்.

- இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை ஏற்படுத்தியதோடு முஸ்லிம் அரசியல் தோற்றம் பெறுவதற்கும் வழிவகுத்தது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

முடிவுரையில் மேலுள்ள கலந்துரையாடல் தொடர்பான ஒரு சுருக்கத்தினையும் அது பெற்றுக் கொண்ட வெற்றிகள், அதன் தாக்கங்கள் பற்றிய விமர்சனமும் உள்ளடக்கப்பட வேண்டும். பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கங்களால் இலங்கையில் காலனித்துவ யுகத்தின் கலாசார அடையாளங்கள் அரசியலுக்கான அடிப்படையினை வழங்கின. அத்தோடு அதன்மூலம் சமூகங்களுக்கிடையில் அரசியல் மலர்ச்சியும் ஆரம்பமானது. இவ்வியக்கங்கள் காலனித்துவ இலங்கையில் வளர்ச்சியடைந்த முக்கிய சமூக, கலாசார இயக்கமாகவும் இருந்தது.

## (iv) டொனமூர் சீர்திருத்தக் காலத்தில் சிறுபான்மையினரின் அரசியல் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இத்தலைப்பு இலங்கையில் டொனமூர் யாப்புக் காலத்தில் இனச்சிறுபான்மையினர் அரசியல் தொடர்பாக பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட அறிவினை மதிப்பிட முற்படுகின்றது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் விடையினை ஆரம்பிக்கும்போது காலனித்துவ ஆட்சியாளர்கள் பிரதிநிதித்துவத்துக்காக ஆரம்பத்தில் இனவாரி பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தனர் என்பதனை சுட்டிக்காட்டி, சிறுபான்மை இனக்குழுக்கள் அரசியலில் எழுச்சி பெறுவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பிரதிநிதித்துவமுறை எவ்வாறு துணைபுரிந்தன என்பதனை தெளிவுபடுத்த முடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- டொனமூருக்கு முன்னரான காலத்தில் வர்க்கத்தினை அடிப்படையாகக் கொண்டு சட்டசபையில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொடுத்தலை கண்டுகொள்ள முடிகின்றது.

- காலனித்துவ ஆளுநர்களும் வர்க்க பிரதிநிதித்துவம் எனும் துரும்பினைப் பயன்படுத்தினர். இது காலனித்துவ ஆட்சிமுறையின் சிறந்ததொரு பிரித்தாளும் தந்திரமான செயல்பாடாகும்.

- டொனமூர் மறுசீரமைப்பில் பிரதிநிதித்துவத்திற்காக இடப்பரப்பும், மக்கள் தொகையையும் கவனத்தில் கொள்ளப்பட்டது. இதன்மூலம் இதற்கு முன்னர் காணப்பட்ட இனரீதியான பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்யப்பட்டது.

- இது நீதியான பிரதிநிதித்துவ முறை ஒன்றினை ஏற்படுத்துவதற்கான படிமுறையாகக் காணப்பட்டபோதும் தமிழ் அரசியல் தலைவர்கள் அதனை சிங்கள பெரும்பான்மை ஆதிக்கம் கொண்ட முறை ஒன்றாகவே பார்த்தனர்.

- இதை எதிர்காலத்தில் தமது மக்கள் புறக்கணிக்கப்படுவதற்கான அச்சுறுத்தலாக இவர்கள் கருதினர்.

- இது இனக்குழுக்களுக்கிடையில் சமநிலை பிரதிநிதித்துவ முறை ஒன்றுக்கான கோரிக்கைக்கும் காரணமாகியது.

- டொனமூர் யுகத்தில் இதற்கு முன்னர் காணப்பட்ட சிறுபான்மை – பெரும்பான்மை மேலும் விரிவடைந்து இனத்துவ அடையாளங்கள் அரசியலில் மேலும் உறுதியடைந்தமை இடம்பெற்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மேலுள்ள கலந்துரையாடலின் சுருக்கம் ஒன்றினையும் இனத்துவ அடையாளங்களால் ஏற்பட்ட அரசியல் போட்டிகள் ஏற்படுத்திய எதிர்விளைவுகள் அதன் தாக்கங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். வர்க்கவாத அரசியல் தோற்றம் பெறல் மற்றும் ஒட்டுமொத்த இலங்கையினதும் நவீன ஜனநாயகத்தின் ஆரம்பத்துடன் பிளவடைந்துள்ளமையையும் இதன்போது குறிப்பிடத்தக்க அவதானிப்பாக காட்ட முடியும். பின்னர் இனத்துவ அரசியல், இலங்கையின் ஜனநாயகம் மற்றும் தேர்தல் அரசியலில் நிலையானதொரு இடத்தினைப் பெற்றுள்ளது.

## வினா இலக்கம் 06 :

**1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் எவை?**

**( 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறையான அரசியலமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள் தொடர்பில் விமர்சன ரீதியாக ஆராய்ந்து பார்ப்பதற்கு பரீட்சார்த்தியின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை ஆராய்தல் இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட ஜனாதிபதி முறைமை சில நாடுகளின் ஈர்ப்பினைப் பெற்று உருவாக்கப்பட்ட முறைமை என்பதை தெளிவுபடுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும். இங்கிலாந்து, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க குடியரசு என்பன இதன் கட்டமைப்பாகும். அத்தோடு இவ்

வரசியலமைப்பில் காணப்பட்ட அரசியல் நோக்கங்கள் மற்றும் அதனால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் கட்ட மைப்புகளின் மீது இது பெரிதும் விவாதத்திற்குரிய அரசியலமைப்பாக மாறியுள்ளது என்பதை அறிமுகப் படுத்தும்போது குறிப்பிட முடியும்.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- இவ்வரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி பதவி தனிப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வ- தற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தல். இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரதான- மான விமர்சனம் அரசியலமைப்பின் உருவாக்குனராகக் கருதப்படும் ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது எனும் விமர்சனம் மிக முக்கியமானதாகும்.

- மேற்குறிப்பிட்ட விமர்சனத்தோடு தொடர்புபட்டு காணப்படும் ஏனைய விமர்சனம் ஜனாதிபதிக்கு வழங்கப் பட்டுள்ள சட்டக் காப்பாகும். (சட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலை)

- சட்டக் காப்பு என்பது நடைமுறை சட்டமானது அரச தலைவரை கட்டுப்படுத்தாது என்பதாகும். இந்த சட்டக்கா ப்பானது பாராளுமன்ற முறையிலான அரச தலைவருக்கே உரியதாகும். காரணம் அவர் உண்மையில் நிருவாக நடவடிக்கையில் பங்குப்பற்றுவதில்லை என்பதாலாகும்.

- எனினும் இலங்கையில் ஜனாதிபதியானவர் உண்மை நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றுடன் சம்பிரதாய பூர்வமான அரச தலைவர் அனுபவிக்கும் சம்பிரதாயபூர்வமான அதிகாரங்களையும் அனுபவிக்கின்றமை.

- இந்நிலை தன்னிச்சையாகவும் மற்றும் அதிகாரவாத ஆட்சி முறைக்கு இலங்கையை இட்டுச் சென்றுள்ளமை இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பிரபல்யமான குற்றச்சாட்டாகும்.

- ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தினை தன்னிச்சையாகவும் விரும்பியவாறு பயன்படுத்தியுள்ளார் எனும் குற்றச்சாட்டு.

- இவ்வதிகாரம் ஒட்டுமொத்த அரசியல் கலாசார கட்டமைப்பு மற்றும் கூட்டமைப்புகள் (கூட்டுத்தாபனங்கள்) கீழ்நிலையடைவதற்கும் ஊழல் நிறைந்ததாக மாறுவதற்கும் காரணமாகியுள்ளது என்பது மற்றுமொரு முக்கியமான குற்றச்சாட்டாகும்.

- இவ்வதிகாரம் அரச தலைவருக்குள்ள எல்லையற்ற அதிகாரமாகும். இவ்வதிகாரத்தினை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளார் எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

- இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியை தனியான தேர்தலில் தெரிவு செய்கின்றனர். ஆயினும் ஜனா- திபதிக்கு சட்டத்துறைக்கு வெளியில் இருந்து அமைச்சரவையை அல்லது அமைச்சர்களை நியமிக்க முடியாது. இப்பண்பினை தூய ஜனாதிபதித்துவ அரசாங்க மாதிரியில் காணமுடியாது.

- எவ்வாறாயினும் ஜனாதிபதியால் தலைமைத்தாங்கப்பட்டாலும் அமைச்சரவைக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்று, அரச கொள்கைப் பிரகடனம் ஒன்று தோல்வியடைதல், வரவு செலவு திட்டம் தோல்வியடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை மட்டுமே பதவி விலகும். இதனால் இம்முறையின் கீழ் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான முரண்பாடு களின் போது எதிர்விளைவுகளுக்கு உண்மையில் முகங்கொடுப்பது பிரதமரும் அமைச்சரவையுமாகும்.

- சட்டத்துறையினை கூட்டுதல் கலைத்தல் மற்றும் ஒத்திவைத்தல் போன்ற அதிகாரங்களையும் கொண்டுள்ளார்.

- இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள ஒரு குற்றச்சாட்டு யாதெனில் ஜனாதிபதி சட்டத்துறை விடயங்க–ளில் கணிசமானளவு இருக்கின்றார் என்பதாகும். இதற்குக் காரணம் ஜனாதிபதி மக்கள் கருத்துக் கணிப்பு, வாக்கெடுப்பு ஒன்றினை நடத்த முடியும் என்பதாலாகும்.

குறிப்பு : பரீட்சார்த்திகள் பொருத்தமான சீர்திருத்தங்களை (17, 18, 19)அடிப்படையாகக் கொண்டு தமது விமர்சனங்களை முன்வைக்க வேண்டும்.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

எவ்வாறானபோதும் இது தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் இதன் நன்மையான பண்புகள் குறித்த வாதங்கள் சிலவற்றையும் காண முடிகின்றது.

ஜனாதிபதி முறை, இனங்களுக்கிடையிலான சமாதானம், அரசியல் ஸ்திரத்தன்மை, தேசிய ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்துகின்றது என்பது அதில் ஒன்றாகும்.

எவ்வாறாயினும் இம்முறையின் சாதகமான மற்றும் பாதகமான பக்கங்களைக் குறிப்பிட்டு ஜனநாயக ஆட்சி முறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விமர்சன ரீதியில் அணுகி முடிவுக்கு வரல் முக்கியமானதாகும்.

**வினா இலக்கம் 07 :**

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பரிசீலிக்குக.**

(i) **1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்**

(ii) **1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்**

(iii) **1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நீதித்துறை**

(iv) **1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நீதித்துறை**

**(10 × 2 = 20 புள்ளிகள்)**

(i) **1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

1972 அரசியலமைப்பின் கீழ் இலங்கையினுள் நடைமுறையிலிருந்த தேசிய அரசுப் பேரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் காணப்படும் தெளிவு மற்றும் அதன்மூலம் அந்நிறு வனம் முக்கியம் பெற்றிருந்தது எவ்வாறு என்பது தொடர்பாக மாணவர்களிடமுள்ள தெளிவினை பரிசோதிப்பதே இவ்விடையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**விடய உள்ளடக்கம்**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

1972 அரசியலமைப்பின் கீழ் சட்டத்துறையினை தேசிய அரசுப் பேரவை என அழைத்தனர். அரசின் பிரதான நிறுவனமாக எல்லா அதிகாரங்களும் தேசிய அரசுப் பேரவையிடமே ஒன்று குவிக்கப்பட்டது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- தேசிய அரசுப் பேரவையின் சட்டத்துறை அதிகாரம் மீயுயர்வானது. தேசிய அரசுப் பேரவையின் சட்டத்துறை அதிகாரத்தின் கீழ் அரசியலமைப்பு அல்லது அரசியலமைப்பின் பகுதியொன்றை நீக்கும் அதிகாரம், புதிய அரசியலமைப்பொன்றினை உருவாக்கும் அதிகாரம் என்பன உண்டு என்பதை 44ஆம் உறுப்புரை குறிப் பிடுகின்றது.

- தேசிய அரசுப் பேரவை தனது சட்டத்துறை அதிகாரத்தினை துறக்கவோ, கையளிக்கவோ, வேறு எந்த முறையிலோ கைமாற்றவோ முடியாது என 45 உறுப்புரையில் குறிப்பிடுகின்றது.

- தீர்மானிக்கப்பட்ட பணிகள் தொடர்பில் துணைநிலை சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை எவரேனும் நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு தேசிய அரசுப் பேரவைக்கு அதிகாரம் உண்டு.

- பொது நிதியினை கட்டுப்படுத்தல் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் தேசிய அரசுப் பேரவைக்கு உரியதாகும் (84ஆம் உறுப்புரை)

- தேசிய அரசுப் பேரவைக்கு அனைத்துவித சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் குவிந்திருந்தன.

- இலங்கை குடியரசின் இறைமை அதிகாரம் மக்களுக்குரியது என 3ஆம் உறுப்புரை குறிப்பிடுகின்றது. இவ்விறைமை அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதி நிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவையால் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை 4ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- குடியரசின் அரச அதிகாரத்தின் மீயுயர் கருவி தேசிய அரசுப் பேரவையாகும். தேசிய அரசுப் பேரவைக்கு மக்களின் சட்டவாக்க அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை அதிகாரம் என்பன உண்டு என 5ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பினை உருவாக்கும்போது அதிகார வேறாக்கக் கோட்பாட்டினைப் பின்பற்றாமையினாலேயே இவ்வாறு அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றன.

- தேசிய அரசுப் பேரவைக்குரிய அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் வேறு எந்த நிறுவனங்களும் அழுத்தம் கொடுக்க முடியாது என்பது தொடர்பில் 39 மற்றும் 43 உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தேசிய அரசுப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கைகளும் எடுக்க முடியாது என்பதோடு தேசிய அரசுப் பேரவையால் உருவாக்கப்படும் எந்தவொரு சட்டத்தின–தும் யாப்புறுதன்மையினை ஆய்வு செய்வதற்கு நீதிமன்றுக்கோ வேறு நிறுவனங்களுக்கோ அதிகாரம் காணப்படவில்லை.

- எனினும் தேசிய அரசுப் பேரவையானது ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகளில் தாக்கத்தை செலுத்த முடியும்.

- ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு தேசிய அரசுப் பேரவைக்கு அதிகாரம் உண்டு (26 (2) உறுப்புரை).

- தேசிய அரசுப் பேரவையின் அனுமதியின்றி ஏனைய எந்தவொரு நிறுவனமும் நிதி தொடர்பான எந்த விதமான சட்டங்களையும் பிறப்பிக்க முடியாது (84ஆம் உறுப்புரை).

- தேசிய அரசுப் பேரவையின் அதிகாரங்கள் பணிகள் மூலம் பாராளுமன்ற இறைமை எண்ணக்கரு வெளிப்படுத்தப்பட்டது.

- இதுவரை காணப்பட்ட சட்டத்துறைகளில் பாராளுமன்ற இறைமை கொண்ட ஒரே சட்டவாக்கத்துறையாக தேசிய அரசுப் பேரவையை அறிமுகப்படுத்த முடியும்

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

1972 அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவை குடியரசின் இறைமையினை செயற்படுத்தல் தொடர்பில் விசேட தன்மை பெற்றிருந்தது என்பதை விடையினுள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமானது. இதன்படி தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றுத்துறை, சட்டத் துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்களை ஒன்று குவித்திருந்ததால் இப்பேரவை குடியரசின் மீயுயர் நிறுவனமாக மாறியமை தொடர்பில் முடிவுரையில் கவனம் செலுத்தியிருத்தல் முக்கியமானதாகும். மேலும் இச்சட்டத் துறை சமநிலைத் தலையீடுகளுக்கு உட்படுத்தப்படாமையால் ஆட்சியில் உள்ள அரசியல் கட்சி அதிகாரத்தை மீறி செயற்பட்டமை தொடர்பான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளமையையும் குறிப் பிட முடியும்.

(ii) **1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்**

**(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் மாணவரிடையே உள்ள தெளிவினை பரிசோதிப்பதே இவ்விடையின் எதிர்ப்-பார்ப்பாகும். அரசியலமைப்பின் உறுப்புரைகளை மாணவர்கள் உதாரணமாக குறிப்பிட முடியும். அவ்வா-றான சந்தர்ப்பங்களில் அவ்வுறுப்புரைகள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கவனம் செலு-த்த வேண்டும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

1978 அரசியலமைப்பினை பாராளுமன்றம் அல்லது சட்டத்துறைக்கு அப்பால் ஜனாதிபதி அல்லது நிறை வேற்றுத்துறையினை பலப்படுத்திய ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் 1978 அரசியலமை பிற்குக் கொண்டுவரப்பட்ட 19ஆம் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தை வலுப்படுத்துவதற்கு விதிமுறை கள் ஏற்படுத்தப்பட்டன. இதன்படி 1978 மூல யாப்பிற்கு மாற்றாக 19ஆம் திருத்தத்தின் மூலம் பாராளுமன் றத்தை வலுப்படுத்தல் இலங்கை அரசியலில் முக்கியமானதொன்றாகும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- மக்களின் சட்டவாக்க அதிகாரத்தினை மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களால் ஆன பாராளுமன்றத்தினாலும் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின்போது மக்களாலும் பயன்படுத்த வேண்டும். (4ஆம் உறுப்புரை)

- அரசின் பிரதான சட்டவாக்க நிறுவனமாக பாராளுமன்றம் மக்களின் சட்டவாக்க அதிகாரத்தினைப் பயன்படுத்தினாலும் 1978 அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றுக்கு அதியுயர் அதிகாரம் கிடைக்கவில்லை.

- அரசியலமைப்பின் ஏற்பாடுகளை நீக்குதல், திருத்துதல் போன்றே அரசியலமைப்பிற்கு புதிய விதிகளை உட்புகுத்தல் பாராளுமன்றுக்கு அதிகாரம் காணப்படுகின்றது (75ஆம் உறுப்புரை).

- அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 19ஆம் திருத்தத்தின் மூலம் 1978 மூல யாப்பின் கீழ் நிறைவேற்றுத் துறையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த சட்டத்துறையினை ஓரளவு சுயாதீனப்படுத்தி வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியினை ஓரளவு ஒத்ததான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- 19ஆம் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 33 ( அ ) உறுப்புரைக்கு ஏற்ப ஜனாதிபதி பாராளுமன்றுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

- அத்தோடு 19ஆம் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தை விரும்பியவாறு கலைப்பதற்கு ஜனாதிப-திக்கிருந்த அதிகாரத்தை வரையறுப்பதற்காக அரசியலமைப்பின் 70 ( 1 ) உறுப்புரை திருத்தப்பட்டது. இதன்படி வருகைதராத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக அதன் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் பிரேரணை மூலம் கேட்டுக்கொண்டாலே தவிர பாராளு மன்றத்தின் முதலாவது கூட்டத்திற்கான திகதியிலிருந்து நான்கரை வருடங்கள் செல்லும் வரை ஜனாதி பதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

- பாராளுமன்றத்தின் பிரதான பணியாக பொது நிதியினைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொதுமக்கள் பாதுகா-ப்புக்காக சட்டங்களை ஆக்குதல் என்பவற்றை அடையாளப்படுத்தலாம். விசேட சந்தர்ப்பங்களில் செயற்-குழுக்களை உருவாக்கி அதன்மூலம் சட்ட உருவாக்க செயற்பாடுகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பன பாராளுமன்றம் மேற்கொள்ளும் பணியாகும்.

- 1978 ஆம் ஆண்டு மூல யாப்பின்கீழ் பாராளுமன்றம் கீழ்நிலைக்கு தள்ளப்பட்டதுடன் அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 19 ஆம் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றம் மீண்டும் வலுப்படு-த்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

இவ்விடையில் 1978 அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்திற்குரிய அதிகாரம் மற்றும் பணிகள் கலந்துரையாடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட வேண்டும் என்பதோடு அரசியலமைப்பிற்கான 19ஆம் திருத் தத்தின் மூலம் பாராளுமன்றம் தொடர்பில் நிறைவேற்றுதுறையினால் ஏற்படுத்தக் கூடிய வரையறைகளை ஏற்படுத்திய யாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருத்தல் வேண்டும்.

**(iii) 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நீதித்துறை** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

இலங்கையில் 1972 ஆம் ஆண்டுமுதலாம் குடியரசுஅரசியலமைப்பின் கீழானநீதித்துறைதொடர்பில் மாணவர்களிடம் காணப்படும் அறிவுமற்றும் தெளிவினைஉறுதிப்படுத்துவதே இவ்வினாவின் நோக்கமா-கும்.

**விடய உள்ளடக்கம்**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

குடியரசின் நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று அதிகாரங்களினதும் தோற்றுவாயாக தேசியஅரசுப் பேரவை காணப்படும் என 1972 அரசியலமைப்பின் 5ஆம் உறுப்புரை கூறுகிறது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான மக்கள் ஆணையுடன் ஐக்கியமுன்னணி அரசா-ங்கம் இலங்கையை குடியரசாகமாற்றும் விருப்புடன் காணப்பட்டது. எவ்வாறாயினும் காணப்பட்டசட்டக் கட்-டமைப்பின் கீழ் இவ்வாறனதொரு செயற்பாட்டை செய்யமுடியுமா என்ற பிரச்சினை காணப்பட்டது. இலங்கை குடியரசை உருவாக்குவதற்கு 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் 29 (ii) உறுப்புரைதடையாக அமையும் என எதிர்வு கூறப்பட்டதோடு சட்டத்தை நிருவகிப்போரிடமும் சட்டவல்லுனர்களிடேயும் இது தொடர்பில் சந்தேகங்கள் காணப்பட்டன.

- மேற்குறிப்பிட்டசட்டதடைகளைநீக்குவதற்காக 1971 அரசியலமைப்பு உருவாக்குனர்களால் சோல்பரி-அரசியலமைப்பில் திருத்தமொன்றினைக் கொண்டுவந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினை முன்னர் காணப்பட்ட பிரிவி கவுன்சிலைவிட (அதனைதாண்டிசெல்லும்) அதிகாரம் கொண்ட நீதிமன்றமாக்கினர்.

- 1972 அரசியலமைப்பின் மூலம் 1947 - 1971 வரைகாணப்பட்ட நீதிச்சேவை ஆணைக்குழு இல்லாது செய்யப்பட்டதோடு நீதிதொழிலின் நிருவாகத்தினை மேற்கொள்வதற்காக

  (i) நீதிச்சேவைஆலோசனை சபை

  (ii) நீதிச்சேவைஒழுக்காற்று சபை

  என்ற இரு நிறுவனங்கள் அமைச்சரவைமற்றும் தேசியஅரசுப் பேரவையின் அதிகாரஎல்லைக்குள் உருவாக்கப்பட்டது.

- 1972 அரசியலமைப்பின் மூலம் இதுவரை காணப்பட்ட நீதித்துறை முறைமையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் நீதிமன்றமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துவ-தற்குதேவை ஏற்படும் போது அது தொடர்பான சட்டம் ஒன்றினை தேசியஅரசுப் பேரவையில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி அச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் எனஅரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- 1971இல் பிரிவிகவுன்சிலுக்கு இலங்கை தொடர்பான மேன்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தை

இல்லாது செய்ததன் பின்னர் அப்பணி புதிதாக உருவாக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

- 1972 அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஒருவருடத்தின் பின்னர் நீதிமன்ற முறையில் முழுமையான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய அரசுப் பேரவையால் 1973ஆம் ஆண்டு 44 இலக்க நீதியை நிருவகிக்கும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

- இச்சட்டத்தைநிறைவேற்றுவதன் மூலம் இலங்கைகுடியரசினுள் சட்டத்தை நிருவகிப்பதற்காக புதிய நீதிமன்ற கட்டமைப்பொன்றை உருவாக்குதல், நீதிமன்றத்தின் நீதித்துறை அதிகாரத்தை வரையறுத்தல், நீதிமன்றங்களின் பணிகளை முறைமைப்படுத்தல், சில எழுத்தினாலான சட்டங்களை இல்லாது செய்தல் போன்ற அனைத்து விடயங்களுக்குமான ஒழுங்குகளை வழங்குவதே எதிர்ப்பார்க்கப்பட்டது.

- இச்சட்டத்தினால் இதுவரை காணப்பட்ட நீதிமன்றமுறைக்குப் பதிலாக நீதியை நிருவகிப்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அவையாவன.
  1. உயர் நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்)
  2. மேல் நீதிமன்றம்
  3. மாவட்டநீதிமன்றம்
  4. நீதவான் நீதிமன்றம் (மெஜேஸ்ட்ரேட்)

- 1973ஆம் ஆண்டு 44 ஆம் இலக்கநீதியைநிருவகிக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மூலம் நீதியை நிருவகிப்பதற்காக இலங்கை 16 வலயங்களாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வலயத்தினுள்ளும் மேல் நீதிமன்றம் ஒன்றும், இந்தவலயங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட நீதிமன்றம் என்றவகையிலும், ஒவ்வொருமாவட்டமும் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒருநீதவான் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

## (iv) 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நீதித்துறை (10 புள்ளிகள்)

**நோக்கம்**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட நீதித்துறை கட்டமைப்பு மற்றும் அதன் விசேடத்துவம் தொடர்பில் மாணவர்களின் அறிவினை பரிசோதிப்பது இவ்விடையின் நோக்கமாகும். அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 17 மற்றும் 19ஆம் திருத்தங்களின் மூலம் நீதிமன்ற கட்டமைப்பு மற்றும் அதன் அதிகார பரப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருத்தல் அவசியமாகும்.

**விடய உள்ளடக்கம்**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் ஊடாக இதுவரை காணப்பட்ட நீதிமன்றக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. 1978 மூல யாப்புக்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்களின் மூலம் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டன.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு மற்றும் 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதிமன்ற ஏற்பா-டுகள் சட்டத்தின் மூலம் அறிமுகஞ் செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டமைப்புகள் கீழ்வருமாறு.
    1. உயர் நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்) – Supreme Court
    2. மேன்முறையீட்டு நீதிமன்றம் – Court of Appeal
    3. மேல் நீதிமன்றம் – High Court
    4. மாவட்ட நீதிமன்றம் – District Court
    5. நீதவான் (மஜேஸ்ரேட்) நீதிமன்றம் – Magistrate Court
    6. ஆரம்ப நீதிமன்றம் – Primary Court

- இதில் உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன மேன்நிலை நீதிமன்றங்களாகவும், ஏனைய நீதிமன்றங்கள் கீழ்நிலை நீதிமன்றங்களாகவும் காணப்படுகின்றன.

- உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன ஆவணப்படுத்தலுக்கான சிரேஷ்ட நீதிமன்றங்களாகும்.

- அரசியலமைப்பிற்கு ஏற்ப மக்களின் நீதிமன்ற அதிகாரங்களை நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக பாராளுமன்றத்தால் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- 1978 அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 17 மற்றும் 19ஆம் திருத்தங்கள் மூலம் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் தொடர்பில் ஜனாதிபதிக்கிருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இத்திருத்தத்திற்கு ஏற்ப உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களை நியமித்தல் தொடர்பான பணியினை மேற்கொள்ளும்போது அரசியலமைப்புப் பேரவையினதும் பிரதம நீதியரசரினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் அதன் நீதிபதிகள் நீதிச் சேவை ஆணைக்குவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களை நியமிக்கும்போது ஜனாதிபதியின் பரிந்துரைகளை அரசியலமைப்புப் பேரவை அங்கீகரித்திருந்தாலன்றி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட முடியாது.

- நீதிச்சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசர் மற்றும் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர்கள் இருவரையும் உள்ளடக்கி யதாக இருக்க வேண்டும்.

- நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பில் தண்டனையை விதிப்பதற்கும் சிறையிலடைப்பதற்குமான அதிகாரத்தினை வழங்கியிருப்பது நீதிமன்ற சுயாதீனத்தைப் உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாகும்.

- பாராளுமன்றுக்கு வருகைதராத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பெரும்பான்மை விருப்பின் அடிப்படை யில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியின் கட்டளையின் பேரில் மேல் நிலை நீதிமன்ற நீ-திபதிகளை நீக்க முடியும்.

- உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65 ஆக உள்ளதோடு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 63 ஆகும்.

- உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் திரட்டு நிதியத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும்.

- ஆரம்ப நீதிமன்றங்களின் பிரதி பிஷ்கால்களை ( நீதி அதிகாரிகள் ) கண்காணிப்பதற்காக நாடு முழுவதற்குமான பிஷ்கால் ஒருவர் இருத்தல் வேண்டும்.

- நீதிமன்ற செயற்பாடுகளுக்கு தேவையற்ற தலையீடுகளை செலுத்துதல் குற்றமாகும் என அரசியலமைப்பு குறிப்பிடுகின்றது.

முடிவுரை **(02 புள்ளிகள்)**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் இலங்கையில் நீதிமன்ற கட்டமைப்பு மற்றும் அதிகாரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டதோடு இவ்வரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 17 மற்றும் 19ஆம் திருத்தங்களின் மூலம் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைக்கான காப்பு பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த அதிகாரங்களை வரையறுத்து அரசியலமைப்புப் பேரவைக்கு குறிப்பிடத்தக்க வகிபாகம் வழங்கப்பட்டுள்ளது.

**8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு சிறுகுறிப்புகள் எழுதுக:**

(i) **சார்க் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு**

(ii) **ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சமாதானம்**

(iii) **இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிக்கும் காரணிகள்**

(iv) **சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு** **(10 x 2 = 20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இந்த வினா பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உலக அரசியலின் தன்மை மற்றும் இயக்கம் பற்றிய மாணவர்களின் புரிதல்.

- தெற்காசியாவின் பிராந்திய ஒத்துழைப்பில் சார்க்கின் வகிபங்கு, சாதனைகள் மற்றும் தோல்விகள் பற்றிய மாணவர்களின் அறிவு.

- உலக சமாதானம் மற்றும் சமாதானத்தை பேணுவதில் ஐ. நாவின் (UNO) பணிகளின் முக்கியத்துவம் பற்றிய மாணவர்களின் அறிவு.

- சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் விசேடமாக தொடர்புபடுத்தி (INGOs) உலக அரசியலில் அரசு சாராத செயற்பாட்டாளர்கள் பற்றிய மாணவர்களின் அறிவு.

- வழங்கப்பட்ட நான்கு தலைப்பிலிருந்து மாணவர்கள் இரண்டு தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அந்த தலைப்புகளிற்கு சுருக்கமான சிறு குறிப்புகளை எழுத வேண்டும்.

**(i) சார்க் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு (10 புள்ளிகள்)**

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

- பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (சார்க்) என்பது தெற்காசிய நாடுகளின் ஒரு அமைப்பாகும். இது டிசம்பர் 8, 1985 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

- அதன் ஏழு ஸ்தாபக உறுப்பினர்கள் இலங்கை, இந்தியா, பூட்டான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் பங்களாதேக்ஷ் ஆகும். 2007ல் ஆப்கானிஸ்தான் இந்த அமைப்பில் இணைந்து கொண்டது.

- தெற்காசியாவிற்குள் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஒரு பிராந்திய அமைப்பாக சார்க் உருவாக்கப்பட்டது.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- சார்க் சாசனத்தின் உறுப்புரை I சங்கத்தின் நோக்கங்களையும் உறுப்பு நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பு எவ்வாறு அடையப்பட எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் குறிப்பிடுகிறது.

(அ) தெற்காசிய மக்களின் நலனை மேம்படுத்துதலும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தலும்

(ஆ) பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் கலாசார அபிவிருத்தியை விரைவுபடுத்துதல்

(இ) தெற்காசிய நாடுகளிடையே கூட்டான தன்னம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்

(ஈ) உறுப்பு நாடுகளிடையே புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கைக்கு பங்களித்தல்

(உ) பொருளாதார, சமூக, கலாசார, தொழில்நுட்ப மற்றும் அறிவியல் துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியை ஊக்குவித்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

- சார்க் சாசனத்தின் இரண்டாம் உறுப்புரை சார்க்கினுடைய மூலக் கொள்கைகளை எடுத்துக்காட்டுகிறது. இந்த மூலக் கொள்கைகள் தெற்காசியாவிற்குள் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் இறையாண்மை, சமத்துவம், பிராந்திய ஒருமைப்பாடு, ஏனைய அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை மற்றும் பரஸ்பர நன்மைகள் ஆகியவற்றின் மூலக் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**பொருளாதார, வர்த்தக நிதிசார் ஒத்துழைப்புகள்**

- அங்கத்துவ நாடுகளிடையே பொருளாதார, வர்த்தக மற்றும் நிதி ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும் என சார்க் எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக அங்கத்துவ நாடுகளினால் SAPTA (சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை) மற்றும் SAFTA (தெற்காசிய சுதந்திர வர்த்தக பகுதி) ஆகிய இரண்டு முக்கியமான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

- “ஒருங்கிணைந்த செயற்திட்டம்” (IPA) ஊடான ஒத்துழைப்பு என்பது தெற்காசியாவிற்குள் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான மற்றொரு முயற்சியாகும்.

- இதற்கு அப்பால் வறுமையினை இல்லாதொழித்தல், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படல், சார்க்கினூடாக விளையாட்டுத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குதல், கலாசார ஒத்துழைப்புகள் என்பன இதற்கான சான்றுகளாகும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதில் சார்க்கின் சாதனைகள் மற்றும் தோல்விகள் பற்றிய மதிப்பீட்டை இந்த முடிவுரையில் முன்வைக்க முடியும்.

- பல்வேறு துறைகளில் சில நியாயமான சாதனைகள் இருந்தபோதிலும் அதன் முதன்மை நோக்கங்களான பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பதில் சார்க் ஒரு வெற்றிகரமானதாக உருவாகவில்லை. அந்த தோல்விகளுக்கு பல காரணங்கள் காணப்பட்டன.

- அரசுகளுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அல்லது தலையிடுவதற்கு சட்டபூர்வமான நிறுவனமாக அமையவில்லை. அரசியல் ரீதியாக விவாதத்திற்குரிய காரணங்களை அமைப்பின் கொள்கையினாலேயே புறக்கணிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும்.

- இந்தியாவின் ”பலம்பொருந்தியவர் போன்ற நடத்தை” (Big Brother Behaviour) தொடர்பான பயம் நெருக்கமான பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பைத் தடுக்கின்றமை.

- இந்தியாவிற்கும் பிற அங்கத்துவ நாடுகளுக்கும் இடையிலான சமமற்ற தன்மை அல்லது அதிகார ஏற்றத்தாழ்வு சிறிய சார்க் நாடுகளிடையே ஒரு முக்கிய கவலைக்குரிய விடயமாக காணப்படுகின்றமை.

- அங்கத்துவ நாடுகளிடையே காணப்படுகின்ற வெவ்வேறு அரசியல் முறைகள் மற்றும் சமூக நிலைகள் பொதுவான தன்மைகளைக் காட்டிலும் அங்கத்துவ நாடுகளுக்கு இடையிலான வேறுபாடுகளையே எடுத்துக்காட்டுகின்றன.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

சார்க் அமைப்பு தென்னாசியாவின் பிராந்திய ஒத்துழைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டமை, தென்னாசிய அரசியலின் முன்னேற்றகரமான அம்சமாக இருந்தது. எனினும் தென்னாசியாவின் அரசியல் யதார்த்தங்கள் அதற்கு தடையாக உள்ளன. இது சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள் தொடர்ந்தும் முகங்கொடுக்கும் பிரச்சினையாகியுள்ளது.

(ii) **ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சமாதானம்** **(10 புள்ளிகள்)**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

- ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டில் ”போரின் துன்பத்திலிருந்து அடுத்தடுத்த தலைமுறையினரைக் காப்பாற்றுவதற்காக” ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதாகும்.

- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை முகாமை செய்வதற்கான பிரதான பொறுப்பை பாதுகாப்பு சபைக்கு வழங்குகிறது.

- இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பாதுகாப்பு சபை ஒரு பிராந்தியத்தில் சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் நடவடிக்கைகளை ஸ்தாபித்தல் உள்ளடங்கலான பல நடவடிக்கைகளை எடுக்கலாம்.

- பாதுகாப்புச்சபை அதன் முடிவுகளை அமுல்படுத்த வர்த்தக தடைகள் போன்ற தடைகளை ஏற்படுத்துவது குறித்தும் முடிவு செய்யலாம். பாதுகாப்புச்சபை தீர்மானங்களின் மூலம் தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

- ஐ.நா.வின் சமாதான முயற்சிகளிற்கான வெவ்வேறான கருவிகள் முரண்பாட்டின் வெவ்வேறு கட்டங்களில் செயல்படுகின்றன.
  - முரண்பாட்டை தடுத்தல்
  - சமாதானத்தை உருவாக்குதல்
  - சமாதானத்தை பேணுதல்
  - சமாதானத்தை கட்டியெழுப்புதல்
  - சமாதான அமுலாக்கம் என அடையாளம் காணலாம்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஐ.நாவின் நிறுவனம்சார் இயலுமைகள் (உச்சமட்டப் புள்ளிகள் 03)

**பாதுகாப்பு சபை** (Security Council)

- சமாதானத்திற்கான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்பு செயற்பாடு காணப்படுதலை தீர்மானிப்பதில் பாதுகாப்புச் சபை முன்னிலை வகிக்கிறது. இது ஒரு பிரச்சனைக்கு சமாதானமான வழிமுறைகளால் தீர்வுகாண சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைக்கிறது. அத்துடன் விட்டுக்கொடுத்தலுக்கான முறைகள் அல்லது தீர்வு விதிமுறைகளையும் பரிந்துரைக்கிறது.

**ஐ.நாவின் பொதுச்சபை** (Genaral Assembly)

- பொதுச் சபையானது, ஐ.நா.வின் கொள்கை வகுத்தல் மற்றும் பிரதிநிதித்துவ உறுப்பாகும். உலக சமாதானத்தைப்பேணுவதில்பொதுச்சபைக்குநேரடியாகவழங்கப்பட்டுள்ளகடமைகள்இல்லையென்றாலும் சமாதானத்தை பேணிக்கொள்வதற்கு பாதுகாப்பு சபைக்கு இது உதவுகிறது.

- ஐ.நா பின்வரும் வழிமுறைகள் மூலம் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை பராமரிக்கிறது:

**முரண்பாட்டினை தவிர்த்தல் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துதல்**

- முரண்பாட்டை தவிர்த்தல் மற்றும் சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கு உதவுவதற்காக ஐ.நா.வின் போர் நிவாரண இராஜதந்திர தொடர்புகளை உருவாக்கியுள்ளதோடு தலையிடுவதற்கான விதிமுறைகளையும் பயன்படுத்துகின்றது.

**அமைதி செயற்பாடு**

- நாடுகளுக்கிடையிலான போர் நிறுத்தம் அல்லது சமாதான உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஐ.நா.வின் அமைதி செயற்பாடு நடவடிக்கை பயன்படுத்தப்படும்.

- அரசியல் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குதல், பொது மக்களைப் பாதுகாத்தல், நிராயுதபாணியாக்கல் மற்றும் போராட்டக்காரர்களை மீள சமூகமயப்படுத்தல் போன்றவற்றுக்கு ஒத்துழைத்தல். தேர்தல் ஏற்பாடுகளுக்கு ஒத்துழைத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டல், சட்டத்தின் ஆட்சியினை சாத்தியமாக்குதல் என்பவற்றுக்கும் இது ஒத்துழைக்கின்றது.

**சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்**

- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் நிலைத்திருக்கும் சமாதானத்தை ஏற்படுத்தல், உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன சவாலுக்குரியதாக உள்ளது. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் சவாலை மிகவும் வலுவான வகையில் முகங்கொடுத்தல் என்பவற்றுக்காக 2005ஆம் ஆண்டு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆணைக்குவினை (Peace Building Commission) உருவாக்கியுள்ளது.

- நிராயுதபாணியாக்கலும் ஆயுத பரிகரணமும்

- ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு, அணு ஆயுதங்களைக் குறைத்தல் மற்றும் நீக்குதல், இரசாயன ஆயுதங்களை அழித்தல் மற்றும் உயிரியல் ஆயுதங்களுக்கு எதிரான தடையை வலுப்படுத்துதல், கண்ணிவெடிகள், சிறிய ஆயுதங்கள் மற்றும் இலகுரக ஆயுதங்களின் பெருக்கத்தைத் தடுத்தல் போன்றன முக்கியம் பெறுகின்றன.

- ஐநாவின் பல்வேறு விதிமுறைகள் இம்முயற்சியில் பங்களிக்கின்றன. பல்தரப்பு நிராயுதபாணியாக்கல் உடன்படிக்கைகளில் மிகவும் பரந்துபட்ட அணுவாயுதங்கள் பரவலாவதைத் தடுப்பதற்கான உடன்படிக்கை (NPT) 1970களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இரசாயன ஆயுத உடன்படிக்கை 1997 இல் மற்றும் உயிரியல் சார் ஆயுத உடன்பாடு 1975 இலும் நடைமுறைக்கு வந்தது.
- பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு
- பயங்கரவாதத்ததை இல்லாதொழித்தல்

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

இந்த முடிவுரை உலக சமாதானம் மற்றும் ஒழுங்கை பேணுவதில் ஐ.நா.வின் பங்கு பற்றிய மதிப்பீட்டைக் கொண்டிருக்க வேண்டும். இது தொடர்பான பதிவு ஒரு கலவையானது. அதன் சிறந்த முயற்சிகளுடன் வன்முறையான அரசுகளுக்கிடையிலான போர்களும் உள்நாட்டு முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன என்ற விமர்சனங்கள் உள்ளன. அண்மைய தசாப்தங்களில் ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் நடந்த இனப்படுகொலை மோதல்களைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது என்பது ஒரு பெரிய விமர்சனமான விடயமாக காணப்படுகின்றது. பின்னடைவுகள் மற்றும் தோல்விகளைக் கொண்டு காணப்படினும் இன்றளவிலும் உலக சமாதானத்தின் நலன்களை முன்னேற்றும் உலக அமைப்பாக ஐ.நா காணப்படுகின்றது.

(iii) **இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிக்கும் காரணிகள்** **(10 புள்ளிகள்)**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பொதுவாக சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. இது உண்மையில் உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு பொதுவானது. ஆயினும் வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்கும் உள்நாட்டு காரணிகள் எப்போதும் அந்தந்த நாடுகளின் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் வரலாற்று நிலைமைகளோடு விசேடமாக நோக்கப்படுகின்றது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

**உள்வாரியான காரணிகள்**

**புவிசார் அரசியல் அமைவிடம்**

- இலங்கை இந்து சமுத்திரத்தின் மையத்தில் ஒரு முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது.
- இந்தியாவுடனான அதன் நெருக்கம் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாறு முழுவதும் வெளியுறவுக் கொள்கையின் தன்மையினை தீர்மானிப்பதில் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது.
- ஒரு மண்டலம், ஒரு பாதை, முன்முயற்சி போன்ற புதிய கடல்சார் மூலோபாய முயற்சிகளின் மத்தியில் அமைவிடம் தற்போது முக்கியமான காரணியாக காணப்படுகின்றது.

**ஆட்சியாளர்களின் அரசியல் அபிலாசைகள்**

- எந்தவொரு நவீன தேசத்தின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதிலும் ஆட்சி மற்றும் அரசியல் உயர்குழாமினரின் அரசியல் அபிலாசைகள் என்பன செல்வாக்கு செலுத்துகின்றன.
- ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது இலங்கையின் வெளியுறவுக் கொள்கை உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார போக்குகளுக்கு ஏற்ப மிகவும் திறந்துவிடப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியின் கீழ் ஆரம்பத்தில் வெளியுறவுக் கொள்கை உத்திகள் அணிசேராக் கொள்கைகளாலும் பின்னர் சமூக ஜனநாயக கொள்கைகளுக்கு இணையாக திறந்த மூலோபாயத்தினாலும் வடிவமைக்கப்பட்டன.

**பொது மக்களின் அபிப்பிராயம்**

- வெளியுறவுக் கொள்கை ஒரு நாட்டின் உள்வாரியான கொள்கையின் நீடிப்பாக கூடிக் குறைந்தளவிலான ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- வெளியுறவுக் கொள்கைகளை தீர்மானிப்பதில் பொதுமக்கள் அபிபிராயத்தை நோக்கி அரசாங்கங்கள் பெரும்பாலும் தங்கள் நெகிழ்வுத்தன்மையைக் காட்டியுள்ளன.

**தேசிய அதிகாரம்**

ஒரு நாட்டின் தேசிய அதிகாரம் என்பது பௌதீக, மனித மற்றும் கருத்தியல் வளங்களின் கலவையாகும். தேசிய அதிகாரத்தின் செல்வாக்குடன் செல்வந்த நாடுகள் உலக அரங்கில் சக்திவாய்ந்த கொள்கை நிலைப்பாடுகளைத் தொடங்க முடியும். ஒரு சிறிய நிலப்பரப்பைக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் தேசம் என்ற வகையில் இலங்கை மிகக் குறைந்த தாக்கத்தினையே செலுத்த முடியும்.

**வெளிவாரியான காரணிகள்**

- பிராந்திய அதிகார சமநிலை:
  பிராந்திய அதிகார சமநிலை பெரும்பாலும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் செல்வாக்கு செலுத்துகிறது. குறிப்பாக இந்தியாவின் அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகள் இதில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றன.

**சர்வதேச அதிகார சமநிலை:**

- தற்போதைய பல் துருவ அதிகார சமநிலையின் தன்மை இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பதில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உலகளாவிய நிலையில் பல அதிகார சக்திகள் காணப்படுவதால் வெளியுறவுக் கொள்கை பெரும்பாலும் இலங்கையின் சமீபத்திய காலங்களில் நடுநிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சிறிய தேசமாக உலக முறைமையில் உள்ள அனைத்து அதிகார மையங்களுடனும் இலங்கை மென்மையான இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும்.

**சர்வதேச அரசியல் பொருளாதாரம்:**

- நவ தாராளவாத பொருளாதார மற்றும் அரசியல் கருத்துக்கள் உலக அரங்கில் அதிகாரத்தில் இருப்பதால், பொருளாதார இராஜதந்திரம் (Economic Diplomacy) இலங்கையின் அண்மைய வெளியுறவுக் கொள்கையின் மிகவும் தனித்துவமான கருத்தியலாக காணப்படுகின்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

அண்மைய ஆண்டுகளில் சில நேரங்களில் குறிப்பிட்ட ஆட்சி தொடர்பான விசேடமான வெளியுறவுக் கொள்கை நோக்குநிலைகள் காணப்பட்ட போதும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது அண்மைக்காலமாக ஒரு சமாந்தர நிலையில் செல்கின்ற போக்கினை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறாயினும் உலக அரசியல் யாதார்த்தத்தின் கீழ் உள்வாரியான காரணிகள் மற்றும் வெளிவாரியான காரணிகள் சமநிலைப்படுத்தல் தொடர்பில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன என்பதனைக் குறிப்படல் வேண்டும்.

(iv) **சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு** **(10 புள்ளிகள்)**

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

தற்போதைய உலக அரசியலில் செல்வாக்கு செலுத்தும் ஒரு அரசு சாராத செயற்பாட்டாளராக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) கருதப்படுகின்றன. இவை அரசின் எல்லைகளுக்கு அப்பால் செயல்படும் நிறுவனங்கள் ஆகும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- ஐ. நா வரையறுப்பது போல, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) தனியாரினால் நிறுவப்பட்டவையாகும். அரசுகளிலிருந்து சுயாதீனமாக இருக்கும் சட்டத்தின் ஆட்சியை நோக்கியதாக இருக்கும் தனியார் நலன்களைக் காட்டிலும் பொது நலன்களைப் பின்பற்ற வேண்டும் என்பதும், சர்வதேச பரப்பெல்லையைக் கொண்டுள்ள, சாதாரண நிறுவனக் கட்டமைப்புக்களைக் கொண்ட அமைப்புகள் அரசசார்பற்ற அமைப்புகள் என வரையறுக்கப்படுகின்றது.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) இதனை ”அரசுகளுக்கிடையிலான உடன்படிக்கை ஒன்றினால் அன்றி, அரசுகளுக்கு தமது உத்தியோகத்தர்களை நியமிக்கும் ஆற்றல் கொண்ட, எனினும் அந்நியமனங்கள் அல்லது உதிதியோகத்தர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு தடை ஏற்படுத்தாத அமைப்புகள் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் கூட்டு” என வரையறுத்துள்ளது.

- சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உதவி வழங்குவதில் ஒரு சக்திவாய்ந்த அமைப்பாகவும், மேலும் சர்வதேச மேம்பாட்டு கட்டமைப்பிற்குள் ஒரு வகையான முக்கியமான செயற்பாட்டாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

- அவை இப்போது முன்னெப்பொழுதையும் விட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அதிக உதவிகளை வழங்கி வருகின்றன. குறிப்பாக பெரிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) வரவு செலவுத் திட்டங்கள் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சில ஒழுங்கமைப்புக்களையும் சில நன்கொடை நாடுகளையும் விட அதிகமாக உள்ளன.

**உலகளாவிய ரீதியில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) வளர்ச்சியை ஏற்படுத்திய காரணிகள்**

அ. தேசிய அரசுகளின் வீழ்ச்சி – அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை குறைவடைதல், பொதுத்துறை வளங்கள் குறைவடைதல், தனியார்மயமாக்கல், தோல்வியுற்ற அரசுகள்.

ஆ. உலகமயமாக்கலுக்குட்பட்ட உலக முறைமையின் தோற்றம்.

இ. பல்தேசியக் கம்பனிகளின் தனியார்மயமாக்கம்

ஈ. தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள்.

உ. வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தை அனுமதிக்கும் நவ தாராளவாத உலக ஒழுங்கின் மேலாதிக்கம்

ஊ. சர்வதேச இராஜதந்திரத்தின் வளர்ச்சி

- சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) இறையாண்மை கொண்ட நிறுவனங்கள் அல்ல என்றாலும் சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தும் ஒரு பரந்த ஆற்றலைக் கொண்டுள்ளன. மேலும் பல சந்தர்ப்பங்களில் அந்த திறனை நிரூபித்துமுள்ளன.

- உள்நாட்டில் வரையறுக்கப்பட்ட தேசிய நோக்கங்களைப் பின்பற்றுவதில் ஒரு அரசாங்கத்தின் வெற்றியானது புதிய சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட நிறுவன சூழல்களில் எந்தளவு வெற்றிகரமாக தொடர்புகளைப் பேணுகின்றது எனும் விடயத்திலேயே தங்கியுள்ளது.

- இன்று சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உலக அபிவிருத்தி நிதிகளில் சுமார் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கையாளுகின்றனர்.

**உலக அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) தாக்கம்**

அ. கொள்கையாக்கத்திற்கான உள்ளீடுகளை வழங்குதல்: சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்(INGOs) மக்களிடையே ஆதரவு தளங்களை உருவாக்குகின்றன, சுயாதீனத்துறை தொடர்புகளை வலுப்படுத்துகின்றன, மேலும் நீண்ட காலத்தில் கொள்கையை பாதிக்கும் நோக்குடன் மாற்று அணுகுமுறைகளை உருவாக்குகின்றன.

ஆ. சேவைசார் ஒதுக்கீடுகள், திறன் விருத்தி மற்றும் நிறுவனம்சார் தாக்கங்கள்

இ. கொள்கைகளை வடிவமைத்தல். நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் நடைபெறும்.

ஈ. கண்காணிப்பு – சூழல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கண்காணிப்பு பொறிமுறைகளாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- பெரும்பாலான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உலகின் வடக்கு நாடுகளை அடிப்படையாகக் கொண்டவை அல்லது உலக மூலதனச் சந்தையின் மூலம் நிதியளிக்கப்படுகின்றனவாகும். இந்த அடிப்படையில் பலம்வாய்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் (INGOs) பெரும்பாலானவர்கள் நவ தாராளவாத பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களின் கீழ் செயற்படுகிறார்கள்.

- சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) நோக்கம் நவ தாராளவாத கொள்கைகளுடன் இணைந்தவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை எளிதில் அரசுகளின் தேசிய எல்லைகளை ஊடுருவி சென்று அபிவிருத்திச் செயற்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற முயற்சிக்கின்றன.

- குறை விருத்தி நாடுகளின் (LDCs) ஆட்சிகள் எப்போதுமே அவற்றின் அபிவிருத்தி செயற்பாட்டில் மூலதனம் மற்றும் தொழில்நுட்ப திறன்களின் பற்றாக்குறையுடன் இருப்பதால் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) அவற்றின் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதில் முன்னிலை வகிக்கின்றன.